

**டில்லியை குறிவைக்கும் ஜெயலலிதா**



**தொடரும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்**

ஒக்டோபர் 30- நவம்பர் 5, 2011 October 30 - November 5, 2011 பக்கங்கள் -28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA


# சுடர் ஒளி

THE SUDAROLI

வாரமலர்



**வெளிநாட்டுக்கென சென்று காணாமல் போனவர்கள்!**






# எண்ணெய் வேட்டையில் இன்னுமொரு வெற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய்யே! நீ தான் இதயத்தின் எதிரியா?



இதயத்திற்கு எதிரி என்றால் அது எண்ணெய்தான். எண்ணெயைக் குறைத்துக் கொண்டால், கூடுமான அளவு தவிர்த்துவிட்டால் இதயம் நம்மை வாழ்த்திக் கொண்டே வாழ்ந்து கொண்டிருக்கும் என்கிறார்க்ள் மருத்துவர்கள்.

இதய நோய்க்கு எண்ணெய்தான் மூல காரணமாக விளங்குகிறது. அசைவ உணவுகளை எண்ணெய் ஊற்றி அதிகநேரம் வறுத்து சாப்பிடு வதால் அதிக எண்ணெய் உடலில் சேர்கிறது.

எனவே எண்ணெய் இல்லாமல் சமையல் செய்து சாப்பிட்டால் இதய நோய் வராது என்றும் இதயநோய் இருப்பவர் மட்டுமல்ல, ரத்த நாளத்தில் அடைப்பு இருப்பவர்கள் கூட, எண்ணெய் பயன்படுத்தாத சமையலை சாப்பிட்டால் ரத்த நாளத்தில் ஏற்பட்ட அடைப்பு குறைகிறது என்றும் அறுவை சிகிச்சையே தேவை இல்லை என்றும் இதய சிகிச்சை நோய் மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

எண்ணெய் இல்லாத சமையல் குறித்து டாக்டர் பிமல் சாஜர் கூறுகையில், இதன் நோக்கமே இதய நோய் இல்லாமல் எல்லோரும் வாழ வேண்டும்.

இதய நோய் வந்தவர்களும் அதில் இருந்து விடுபட்டு சுகமாக இருக்க வேண்டும் என்பதே ஆகும். இதய நோய்க்கு மூல காரணம் எண்ணெய் தான். எண்ணெய் இல்லாமல் எல்லாச் சமையலும் செய்ய முடியும்.

அதாவது ஒவ்வொரு சாப்பாட்டிலும் என்ன என்ன கொழுப்பு சத்து உள்ளது. எவ்வளவு கலோரி உள்ளது. அவற்றால் உடலுக்கு ஏற்படும் பிரச்சினை என்ன. வரும் நோயாளிகளின் வேலை என்ன என்பது குறித்து விரிவாகக் கேட்டறியப்படும்.


அறுவை சிகிச்சையை விட இவற்றை கடைபிடிப்பது எளிதானது என்பதால் பெரும்பாலானவர்கள் இதனைக் கடைபிடித்து இருதய நோய் இன்றி நலமுடன் வாழ்கிறார்கள்.

ரத்தநாளத்தில் அடைப்பு உள்ளவர்கள் அடைப்பு நீங்கி நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். அதற்கு முக்கிய காரணம் எண்ணெய் இல்லாமல் சாப்பிடுவதே ஆகும் என்றும் அவர் தெரிவித்தார்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய் வேட்டையில் இன்னுமொரு வெற்றி!

■ சந்திரசேகர ஆசாத்

42 ஆண்டுகளாகக் கொடிகட்டிப் பறந்த ஒரு சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்து விட்டது. அதன் சக்கரவர்த்தியாகத் தன்னை நிலைநிறுத்தியி... கேர்ணல் கடாபி கொல்லப்பட்டு வி... கட...த பெப்ரவரி மாதத்தில் ஆரம்பித்த கிளர்... சில... ஆ...க்கணக்கான உயிர்களைப் பலி கொண்ட பின்பு ஒரு ஆட்சி மாற்றத்திற்கான அத்திவாரத்தை உருவா க்கியுள்ளன. இக்கிளர்ச்சியாளர்களுக்கு நேட்டோ படைகள் வழங்கிய விமானத் தாக்குதல்கள் ஆதரவும் அமெரிக்கா உட்பட மேற்குலகம் வெவ்வேறு வடிவங்களில் வழங்கிய உதவிகளும் இணைந்து கேர்ணல் கடாபியை மிகக் குறு கிய காலத்தில் தோல்விக் குள் தள்ளி விட்டன.



எகிப்தின் முன்னாள் அதிபர் நாசரைத் தன் ஆதர்ச வழிகாட்டியாகக் கொண்ட கேர்ணல் கடாபி 1969ல் இராணுவப் புரட்சி மூலம் லிபிய மன்னர் இடிரிஸ் அல் செனூர்யின் சர்வாதிகார ஆட்சியைக் கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்றினார். புரட்சிகரமானதும், முற்போக்கானதும், சுதந்திரமான சிந்தனைப் போக்கைக் கொண்ட இவர் புதிய நவீன லிபியாவைக் கட்டியெழுப்புவதில் முழு மூச்சுடன் ஈடுபட்டார். லிபியாவில் எண்ணெய் உட்பட ஏனைய வளங்களை அமெரிக்கா உட்பட்ட மேற்குலகம் கொள்ளையிட்டுச் செல்லும் நிலைமையை மாற்றியமைத்தார். லிபியாவில் அமைக்கப்பட்டிருந்த அமெரிக்கப் படை முகாம்களை வெளியேற்றினார். அந்நாட்களில் அவர் அரபு உலகின் இணையற்ற ஒரு இளம் தலைவராகப் போற்றப்பட்டார். அதேவேளையில் இவர் அணிசேரா நரடுகளின் அமைப்பின் சுயாதீனத் தன்மைக்கும், எழுச்சிக்கும் வழங்கிய பங்களிப்பு காத்திரமானது. 'பச்சைத்திட்டம்' என்ற பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் லிபியாவைத் தனித்துவமான ஒரு தேசமாகக் கட்டியெழுப்புவதில் முனைப்புடன் செயற்பட்டார்.

அமெரிக்காவும் அதனைச் சேர்ந்த மேற்குலக நாடுகளும் உலகில் எந்த ஒரு மூலையிலும் மேற்குலக நாடுகளுக்கு எதிரான போக்கைக் கொண்டிருக்கும் நாடுகளின் ஆட்சிகளைக் கவிழ்ப்பதில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடத் தவறுவதில்லை. அதேவேளையில் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளும் அவற்றுக்கு ஆதரவு வழங்குவதாகப் பேர்க்கு காட்டி விட்டு பொறுத்த நேரத்தில் கைவிடுவதே வரலாறாகி விட்டது.

இவ்வகையில் ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி நேரடியாகவே இரசாயன ஆயுதங்களை ஒழிப்பது என்ற பேரில் படையெடுப்பின் மூலம் அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளால் வீழ்த்தப்பட்டு அவரும் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டார். அதேபோல் ஆப்கானிஸ்தானில் ரஷ்ய ஆதரவாளரான நஜிபுல்லாவின் ஆட்சியைக் கவிழ்க்க தலிபான், அல்கெயிடா போன்ற அமைப்புகள் அமெரிக்காவால் சகல உதவிகளும் வழங்கப்பட்டு வளர்க்கப்பட்டன. நஜிபுல்லா வீழ்த்தப்பட்டு தலிபானின் ஆட்சியைக் கைப்பற்றிய பின்பு, அல்கெய்டா தலைவர் பின்லாடனைப் பிடிப்பது என்ற பேரில் தலிபான்கள் ஆட்சியை விட்டு அகற்றப்பட்டனர் சதாம் ஹுசைனின் ஆட்சியும் தலிபான்கள் ஆட்சியும் அகற்றப்பட்டாலும் இரு நாடுகளிலும் குண்டு வெடிப்புகள் மூலமும் மோதல்கள் மூலமும் தினமும் நூற்றுக் கணக்கான மக்கள் இறந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இரு நாடுகளினது எண்ணெய் வளத்தை அபகரிப்பதில் மேற்குலகம் வெற்றி பெற்றுவிட்டது. அண்மைக் காலமாக அரபுநாடுகளின் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டங்கள் வெடித்துக் கிளம்பின. இவை, டுனிஷியாவிலும், எகிப்திலும் ஏற்படுத்திய ஆட்சி மாற்றங்கள் ஏனைய நாடுகளின் போராட்டங்களையும் முனைப்படைய வைத்தன.

யேமன், ஐக்கிய அரபு எமிரேட் ஆகிய நாடுகளில் போராட்டங்கள் வெடித்த போதும் அவை இரும்புக் கரம் கொண்டு அடக்கப்படுகின்றன. அமெரிக்காவோ, நேட்டோவோ போராட்டக் குழுக்களுக்கு எவ்வித ஆதரவையும் வழங்குவதாகத் தெரியவில்லை. ஏனெனில் அந்நாடுகளில் மேற்குலகின் எண்ணெய் வேட்டை தங்குதடையின்றி இடம்பெற்று வருகிறது. எனவே அங்கு ஆட்சிமாற்றம் ஏற்படுத்த வேண்டிய தேவை மேற்கு நாடு களுக்கு தற்சயமம் இல்லை.

டுனீசியாவிலும், எகிப்திலும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், நீண்ட காலச் சர்வதிகார ஆட்சி என்பனவற்றுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் வெடித்தன. ஆனால், இவை ஆயுதப் போராட்டம் என்ற கட்டத்திற்கு வளர்ச்சியடைய வில்லை. ஆனால் இராணுவத்தின் ஒரு பகுதியினர் மக்களுக்கு வழங்கிய ஆதரவும் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களும் அந்நாட்டு ஆட்சியாளர்களைப் பதவியிறங்க வைத்தன. இந்நாடுகளில் இடம் பெற்ற போராட்டங்களுக்கு மேற்குலகமோ, நேட்டோவோ எவ்வித படையுதவியையும் வழங்கவில்லை. ஏனெனில் அவற்றின் ஆட்சியாளர்கள் எப்போதுமே மேற்குலக விரோதப் போக்கைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்த தலைவர்களை வைத்துக் கொண்டு தமது எண்ணெய் வேட்டையைத் தொடர முடியாது என்பதால் மக்களின் எழுச்சிக்குக் கருத்து அடிப்படையிலான ஆதரவை மட்டும் வழங்கி வந்தன. அதாவது மக்கள் எழுச்சியின் பயன்கள் கூட இவ்விரு நாடுகளிலும் மேற்கு நாடுகளின் எண்ணெய் வேட்டைக்குச் சாதகமாகவே பயன்படுத்தப்படும் என்பது தெளிவான விஷயமாகும்.

**கடாபி 1969ல் இராணுவப் புரட்சி மூலம் லிபிய மன்னர் இடிரிஸ் அல் செனூர்யின் சர்வாதிகார ஆட்சியைக் கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்றினார். புரட்சிகரமானதும், முற்போக்கானதும், சுதந்திரமான சிந்தனைப் போக்கைக் கொண்ட இவர் புதிய நவீன லிபியாவைக் கட்டியெழுப்புவதில் முழு மூச்சுடன் ஈடுபட்டார். லிபியாவில் எண்ணெய் உட்பட ஏனைய வளங்களை அமெரிக்கா உட்பட்ட மேற்குலகம் கொள்ளையிட்டுச் செல்லும் நிலைமையை மாற்றியமைத்தார். லிபியாவில் அமைக்கப்பட்டிருந்த அமெரிக்கப் படை முகாம்களை வெளியேற்றினார்.**

ஆனால் லிபியாவில் வறுமையோ, வேலையில்லாத் திண்டாட்டமோ இருக்கவில்லை. மேற்குலகின் பொருளாதாரத் தடை காரணமாக சில நெருக்கடிகள் ஏற்பட்ட போதும் கேர்ணல் கடாபி அவற்றை வெற்றிகரமாகவே கையாண்டு வந்தார். ஆனால் சர்வதேச ரீதியாக இவர் எடுத்த மேற்குலக எதிர்ப்புப் போக்கு, இஸ்ரேலுக்கு எதிரான உறுதியான நிலைப்பாடு, பாலஸ்தீனப் போராளிக்கு வழங்கிய பகிரங்க ஆதரவு என்பன இவரை ஒழிப்பதற்கான ஒரு முக்கிய இலக்கை மேற்குலகத்திற்கு ஏற்படுத்தியிருந்தது. எனவே அவர்கள் கேர்ணல் கடாபியைக் கவிழ்ப்பதற்கான தருணத்திற்காகக் காத்திருந்தனர்.



இவர் சர்வதேச அளவில் ஒரு மேற்குலக விரோதியாக விளங்கிய அதேவேளையில் உள்நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு இடமளிக்கவும் மறுத்து விட்டார். இது இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மத்தியில் இவருக்கு எதிர்ப்பை உருவாக்கியது. இவர் மேற்கொண்ட அரசியல் எதிரிகளுக்கு எதிரான கொடூரமான பழிவாங்கல்கள் மக்கள் மத்தியில் இவருக்கு இருந்த செல்வாக்கைப் பலவீனப்படுத்த இவரது எதிரிகளுக்குச் சாதகமான நிலைமைகளைச் சிருஷ்டித்தன. அரசியலில் இவரின் சர்வாதிகாரப் போக்கு, குடும்ப மேலாதிக்கம் என்பனவும் இவர் மீது மக்களுக்கு வெறுப்பை உருவாக்கின.

டுனிசியாவில் தொடங்கிய போராட்ட அலைகள் ஏனைய நாடுகளுக்குப் பரவிய போது அவை கடாபியின் மேற்குலகத்தினரும் சரியாகவே பயன்படுத்தினர். கடாபிக்கு எதிரான வெவ்வேறு குழுக்களும் உள்நாட்டில் போராட்டங்களை ஆரம்பித்து நடத்த, நேட்டோ விமானக் குண்டு வீச்சுகள் மூலம் கடாபியின் போரிடும் ஆற்றலை அழிக்க ஆரம்பித்தன. பென்காசியில் ஆரம்பித்த போராட்டம் குறுகிய காலத்திலேயே நாடு முழுக்கப் பரவி கேர்ணல் கடாபியின் ஆட்சியைக் கவிழ்த்தது. கடைசியில் அவரும் கொல்லப்பட்டார்.

மேற்குலகின் எண்ணெய் வேட்டைக்கு எதிரான நாடுகளாக அரபுலகில் ஈராக், ஈரான், லிபியா, சிரியா ஆகிய நாடுகள் கருதப்பட்டு வந்தன. இவற்றில் ஈராக், லிபியா ஆகியன தற்சமயம் மேற்குலகின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விட்டன. இன்னும் எஞ்சியிருப்பவை ஈரானும், சிரியாவுமாகும். இப்போது சிரியாவில் ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்படுத்த படிப்படியான தயாரிப்புகள் இடம்பெற்று வருகின்றன.

லிபிய அதிபர் கடாபியின் வீழ்ச்சி மேற்குலகின் தொடர் எண்ணெய் வேட்டையில் இன்னுமொரு வெற்றி என்பது உண்மை தான். ஆனால் இந்த வெற்றி டுனிஷியா போல் ஒரு மக்கள் எழுச்சியால் பெற்ற வெற்றியல்ல என்பது இங்கு முக்கியமானது.

அதேவேளையில் கடாபி கொல்லப்பட்ட விதம் குறித்து சர்ச்சைகள் எழுந்துள்ளன. அது ஒரு போர்க்குற்றம் என மனித உரிமை அமைப்புகள் முழுங்கத் தொடங்கி விட்டன. கடாபியைக் கொன்று அதிகாரத்தைக் கைப்பற்றியவர்களுக்குக் கூட போர்க் குற்ற மூக்கணாங் கயிறு போடப்படவுள்ளது என்பதன் ஒரு முன்னறிவிப்புத் தான் இது.

அதேவேளையில் கேர்ணல் கடாபி கொல்லப்பட்ட விதம் தொடர்பாக கண்டனம் தெரிவித்த இலங்கை அரச தரப்பினரும் போர்க்குற்றம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர். இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்த மறுத்து வரும் இலங்கை இப்படியான ஒரு கோரிக்கையை முன்வைப்பது ஒரு நகைப்புக்குரிய விஷயம் தான்.

கேர்ணல் கடாபியின் மேற்குலக எதிர்ப்புக்கு ஆதரவு தெரிவித்து ஊக்கம் தந்தவை ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள். ஆனால் அவை கடைசி நேரத்தில் கடாபியைக் கைவிட்டமை ஒரு வரலாற்று அனுபவமாகும். இவை எப்படி சதாம் ஹுசைனைக் கைவிட்டனவோ அதே வாய்ப்பாட்டை லிபியாவிலும் பாவித்துள்ளன.

சர்வாதிகாரத்திற்கு எதிரான போராட்டம், ஆபத்தான ஆயுதங்களுக்கு எதிரான போராட்டம், மனித உரிமை மீறல்களுக்கு எதிரான போராட்டம் என எத்தனை உருவங்களில் போராட்டங்கள் இடம்பெற்றாலும் அவை அடிப்படை மக்கள் மத்தியில் உருவாகி வளர்ச்சி பெறாதவையாக அமையுமானால் அவை உலக மேலாதிக்கச் சக்திகளால் தமது தேவைகளுக்குச் சாதகமாகவே பயன்படுத்தப்படும் என்பதற்கு அண்மைய வரலாறுகள் சாட்சியங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுக்கெனச் சென்று காணாமல் போனவர்கள்!



மட்டக்களப்பிலிருந்து..... ▪ சக்தி

**இவர்கள் அனைவரும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகக் கடமை புரிந்த ஒரு முகவரிடம் தான் பணத்தை ஒப்படைத்துள்ளார்கள். அதற்குரிய சான்றுகள் பணம் வங்கியில் வைப்புச் செய்த பற்றுச்சீட்டுகள் எனப் பல ஆதாரங்களையும் முகவரின் கடவுச்சீட்டின் மூலப்பிரதியையும் தம்வசம் வைத்துள்ளார்கள்.**

**நாடு** முழுவதும் வேலையில்லாத்திண்டாட்டம் தலை தூக்கியுள்ள நிலையில் மத்திய கிழக்கு உட்பட வெளிநாடுகளுக்குச் செல்வோர் தொகை அதிகரித்து வருகின்றது. இவ்வாறு வெளிநாடுகளுக்குச் செல்ல முற்படுகின்றவர்கள் அனைவருமே சரியான வழிமுறைகளை நாடுவதில்லை. சிலர் சரியான முகவர்களை நாடி அவர்களூடாகத் தங்கள் பயணங்களை மேற்கொள்கின்றனர். சிலர் குறுக்கு வழிகளூடாகப் பயணங்களை மேற்கொள்கின்றனர். ஆனாலும் இவர்கள் அனைவருமே பெருந்தொகைப் பணத்தைச் செலுத்தியே இப்பயணங்களை மேற்கொள்கின்றனர்.

தவறான முகவர்களை நம்பி பணத்தைக் கொடுத்து ஏமாந்தவர்களில் ஆபத்தானதும், சட்டவிரோதமானதுமான கடல் பயணங்களூடாக வெளிநாடுகளுக்குச் செல்ல முற்படுபவர்களும் அடங்குவர். இவர்கள் கடன்பட்டும், தங்கள் நகைகள் உட்பட சொத்துக்களை விற்றும் இவ்வாறு செல்கின்றனர். எப்படியாவது வெளிநாட்டுக்குச்சென்று உழைத்து கடன்களைக் கட்டி விட்டால் அத்துடன் தங்கள் குடும்பங்களையும் நல்லநிலைக்குக் கொண்டு வரலாம் என்ற நோக்கிலேயே அவர்கள் இவ்வாறான பயணங்களை மேற்கொள்கின்றனர்.

இவர்களில் பலர் பிடிபட்டு வழக்குகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதோடு, அவர்களின் பணமும் பறி போயுள்ளது. இதேவேளை இவ்வாறு பயணம் மேற்கொண்டவர்கள் பலர் காணாமலும் போயுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் இவ்வாறு காணாமல் போனவர்கள் அதிகம். இவர்கள் எங்கிருக்கின்றார்கள் அல்லது இவர்களுக்கு என்ன நடந்தது போன்ற விபரங்கள் எதுவுமே தெரியாத நிலையில் அவர்களின் மனைவி பிள்ளைகள் பரிதவித்துக் கொண்டுள்ளனர்.



இவர்கள் அனைவரும் வெளிநாட்டு முகவர்களால் ஏமாற்றப் பட்டும் பணத்திற்காக விலை போயும் தமது குடும்பங்களை மேலும் வறுமைக்கும் கடன் நிலைக்கும் உள்ளாக்கியுள்ளனர். சட்டரீதியான வழிமுறைகளிலும் சட்டரீதியற்ற வழிமுறைகளிலும் வெளிநாடு சென்றவர்கள் பலர் தற்போது காணாமற் போனவர்கள் என்ற பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ஒரே முகவரிடம் பணத்தைக்கொடுத்து ஏமாந்தவர்கள் சிலரின் அனுபவங்கள் இவை-

ரகுகுமார் இதயகலா (வயது 30) என்ற பெண்மணியை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் கூறுகையில் -

"எங்களுக்குச் சரியான கஷ்டம் வட்டிக்கு காசு வாங்கி, எமது உறவினரிடமும் கடன் வாங்கி அவுஸ்ரேலியா செல்வதற்காக எனது கணவர் 9 லட்சம் ரூபாய் செலவு செய்து சென்றார். எனக்கு 12, 07 வயதுகளை உடைய இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். எனது கணவர் இலங்கையிலிருந்து விமானம் மூலமாகத் தான் புறப்பட்டுச் சென்றார். அவரோடு இன்றுவரை எதுவித தொடர்பும் அற்ற நிலையில் உள்ளோம். நாங்கள் இந்தோனேசியா, மலேசியா அவுஸ்ரேலியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தூதரகங்களுக்கும் IOM, UNHCR ஆகியவற்றுக்கும் அறிவித்துள்ளோம். இதுவரை யாரும் எனது கணவரைக் கண்டுபிடிக்கவில்லை. லட்சக் கணக்கில் கொட்டி இறைத்து கடல் கடந்து சென்று உழைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சட்டரீதியான முகவர் ஒருவர் மூலம்தான் அவர் சென்றார் இப்போது அவரின் தொடர்பு எதுவும் இல்லை. எனது இரண்டு குழந்தைகளும் அப்பாவைக் கேட்டு எனது முகத்தைப் பார்க்கின்றார்கள். தற்போது நாங்கள் அவரைத் தேடும் வேலையில் அலைந்து திரிகின்றோம்" என்றார் கண்ணீர் மல்க.



இவரின் நிலை இவ்வாறு இருக்க மற்றுமொருவர் கூறுகையில்.

"நான் மட்டக்களப்பு ஏறாவூர் பாடசாலை வீதியில் வசிக்கின்றேன். எனது பெயர் யோ.மேகலா. எனக்கு ஒருவயதையுடைய குழந்தை ஒன்று உள்ளது. எனது கணவர் யோகராஜா எமது வீட்டில் இருந்து புறப்பட்டு ஒருவருடமும் பத்து மாதமும் ஆகின்றன. வெளிநாடு செல்வதற்காகத்தான் சென்றார். ஆனால் இன்றுவரை எந்த விதத் தொடர்பும் இல்லை. முகவரிடம் எட்டு லட்சம் ரூபாய் பணம் வழங்கியிருந்தோம்.

இன்றுவரை எனது கணவரின் தொடர்பில்லாமல் நானும் எனது குழந்தையும் தனியாய் தவிக்கின்றோம்" என்றார்.

அதே போன்று மட்டக்களப்பு ஞானசூரியம் சதுக்கத்தைச் சேர்ந்த கோணலிங்கம் துர்க்காயினி என்பவர் கூறுகையில்,

"எமது தம்பி கோணலிங்கம் ஜனேந்திரன் 18 வயது. 11ஆம் தரம் வரை படித்து விட்டு வீட்டில் இருந்தவர். இவரும் வெளிநாடு செல்ல ஆசைப்பட்டு 585000 ரூபா ஏஜென்சிக்கு செலவு செய்து கையில் 35000ரூபாவும் கொண்டு சென்றார். 4 லட்சம் மேலும் கொடுக்க வேண்டும் என்று உத்தரவாதமளிக்கப்பட்டு வெளிநாடு சென்றார். கடைசியாக 2009ஆம் ஆண்டு 5ஆம் மாதம் கிழக்கு திமோர் எனும் இடத்தில் நிற்பதாக மட்டும் அறிந்தோம். பின்னர் எதுவிதத் தொடர்பும் அவரோடு இல்லை. எமது தம்பி மேற்கொண்டு படித்திருந்தால் எம்மோடு இருந்திருப்பார் ஆனால் நாங்கள் அவரின் விருப்பப்படி வெளிநாடு சென்று உழைப்பதற்காக அனுப்பினோம் என்றார்.

இதுபோன்றுதான் மட்டக்களப்பு செங்கலடியைச் சேர்ந்த அ.மனோகரன் (34) என்பவரும் 9 லட்சம் ரூபாய் செலவு செய்து வெளிநாடு சென்றுள்ளார் இவரால் இவருடைய மனைவி காந்தமலர் (30) இரண்டரை வயதை உடைய மகன் பிரசாத் மற்றும், இவரது ஏனைய உறவுகள் இவரின் தொடர்புகள் இன்றி தனியாய் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்கள் அனைவரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் ஒருவரிடம் தான் பணத்தைக் கொடுத்துள்ளார்கள். அதற்குரிய சான்றுகள், பணம் வங்கியில் வைப்புச் செய்த பற்றுச் சீட்டுகள் எனப் பல ஆதாரங்களையும், முகவரின் கடவுச் சீட்டின் மூலப்பிரதியையும் தம் வசம் வைத்துள்ளார்கள்.

இந்த வெளிநாட்டு முகவர் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டவரா சட்டரீதியாகத்தான் இவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினாரா என்பது குறித்து இன்றுவரை அறியமுடியாதுள்ளது. சட்டரீதியாக வெளிநாடு அனுப்பியவரென்றால் இதுவரைக்கும் முகவர் ஏன் தலைமறைவாக இருக்க வேண்டும். வெளிநாடு சென்றவர்கள் ஏன் தமது உறவுகளுடன் தொடர்புகள் அற்ற நிலையில் உள்ளார்கள் என்பதெல்லாம் கேள்விகளாகவே உள்ளன. இவ்விடயங்களை உறவினர்கள் பல அரசியல் வாதிகளிடமும் சமூக ஆர்வலர்களிடமும் கூட கூறியுள்ளார்கள். ஆனாலும் இது வரை இவர்களின் தொடர்புகள் கிடைக்காத நிலையிலேயே உள்ளதாக அவர்களின் உறவினர்கள் கூறுகின்றனர்.

இங்கு தங்கள் அனுபவங் களைப் பகிர்ந்து கொண்டவர்கள் அனைவரும் குறிப்பிட்ட ஒரே முகவரிடம் பணம் கொடுத்துச் சென்றவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பெரியபோரதீவில் உள்ள முகவரின் வீட்டுக்கு சென்றால் அவர் வீட்டில் இல்லை என்கிற பதிலே அவரின் குடும்பத்தினரிடமிருந்து வருகின்றது எனவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு உலைகளின் ஆபத்து! உண்மைநிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது

கூடங்குளம் அணு உலைத் திட்டத்துக்கான வேலை களை இடைநிறுத்த வேண்டும் என்ற தமிழ் நாடு சட்ட சபையின் கோரிக்கை சகல அணு உலைகளுக்குமான ஒழுங்குவிதிகளுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

பிரதமர் மன்மோகன்சிங்கை கூடங்குளத்தில் அமைய இருக்கும் அணு உலையை இடைநிறுத்தத் தூண்டும் வகையில் தமிழ்நாடு சட்டசபையில் மேற்கொள்ளப்பட்ட இடைநிறுத்தக் கோரிக்கை மக்களுக்கு ஓர் வெற்றியாகும்.

திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த பத்தாயிரக்கணக்கானோர் 12நாட்களாக நடத்திய உண்ணாநிலைப் போராட்டம் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நிலைப்பாட்டினைச் சில நாட்களுக்குள்ளாகவே மாற்றமடையச் செய்துள்ளது.

அபாயகரமான தொழில்நுட்பச் செயற்பாடுகளால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்துச் சற்றேனும் ஆய்வுகளை மேற்கொள்ளாது அதனை அமுல்படுத்துவதினால் மக்களுக்கு ஏற்படக்கூடிய அனர்த்தங்களைக் கவனத்திற் கொள்ளாது செயற்படுத்த முனைந்தமைக்கு எதிராக மக்கள் பலத்த எதிர்ப்பினை காட்டினர். அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் எந்த ஒரு திட்டத்தையும் இதுவரையில் மாநில அரசு இடைநிறுத்தக் கோரியது இல்லை.

கடந்த காலத்தில் கேரளாவில் இரண்டு அணு உலைகள் இரத்துச் செய்யப்பட்டன. அதே போன்று உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ள மெகாலய மற்றும் கல்கொன்டர் மலைகளில் இரேனியம் அகழும் இரண்டு திட்டங்களும் இரத்துச் செய்யப்பட்டன. இவைகள் யாவும் பொது மக்களின் எதிர்ப்பின் நிமித்தமே இரத்துச் செய்யப்பட்டன. ஆனால் கூடங்குளம் தீர்மானம் விந்தையானது.

கூடங்குளம் கிளர்ச்சியானது ஒன்றும் புதியதோ அன்றி அதிசயமானதோ அல்ல. இதனை 1980களிலும் மக்கள் எதிர்த்தனர். பின்னர் 1989களின் ஆரம்பத்திலும் மக்கள் இது குறித்துத் தமது எதிர்ப்புகளையும் விசனங்களையும் வெளிப்படுத்தினர்.

கூடங்குளம் பற்றிய சந்தேகங்கள் அம்மாநிலத்தின் அடுத்தவாசலான கேரளாவிற்கும் பரவியது. எண்ணற்ற மக்கள் அமைப்புகள் அணுசக்தித் திட்டங்களைக் குறைகூறி எதிர்த்தன.

இந்திய அணுசக்திக் கூட்டுத்தாபனம்,(NPCIL) உள்ளூர் விவசாயிகள் மற்றும் மீனவர் சமூகத்திற்கும் அணுஉலைகள் மக்களுக்கு ஆபத்தானவையில்லை யெனவும், மிகக் குறைந்த அளவில், சேதமில்லாத வகையில் மட்டுமே இடப்பெயர்வு ஏற்படுமென்று விளக்கங்களை வழங்கி அவர்களை இசையச்செய்வதில் தவறிவிட்டது. ஆனால் ஆயிரக்கணக்கில் வேலை வாய்ப்புக்கள், மற்றும் கூலிகள், மூலப்பொருட்களுக்கான விநியோக ஒப்பந்த வாய்ப்புகள் மற்றும் பிரதேசத்தின் வலுவான அபிவிருத்தி எனப்பல ஆசையூட்டல்கள், வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. எனினும், இவை ஒன்றும் மக்களிடம் எடுபடவில்லை. 2007 இல் விவசாயிகளும் மீனவர்களும் இணைந்து இத்திட்டத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர்.

இக்குழப்பத்துக்கு முக்கியமான காரணி யாதெனில் யப்பானில் நடந்தேறிய புகுஷிமா அணு உலைகளின் பிரச்சினைதான்.

அணுஉலைகளின் செயற்பாடுகளிலும், விநியோக முறைகளிலும் தற்போதும் புகுஷிமாவில் நடைபெறும் பாதுகாப்பற்ற அசம்பாவிதங்கள் குறித்து முக்கியப்படுத்தப்பட்டு எங்கும் பரவியுள்ளது.

அண்மையில் பிரான்ஸ் மார்கோலில் ஏற்பட்ட விபத்து ஏற்கனவே உலகளாவிய ரீதியில் அணுஉலைத்துறையின் இருந்த நம்பிக்கையீனத்தை மேலும் பலவீனமாக்கியுள்ளது.

கூடங்குள எதிர்ப்பிற்கு மூன்று காரணிகள் வலுவூட்டியுள்ளன.

ரஷ்ய நாட்டு அணு பாதுகாப்பு நிபுணர்களினால் ஜனாதிபதி டிமிற்றி மெட்வெடவிற்கு இவ்வருடம் ஆனி மாதத்தில் வழங்கப்பட்ட விசேட அறிக்கையின் விபரங்களை நோர்வேக்குழுவொன்று அதிர்ச்சியளிக்கும் வகையில் அணு உலைகள் குறித்து அறிக்கைப்படுத்தியுள்ளது. அதுபற்றி நோர்வேயின் சக்தித் தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரதம பொறியியலாளரான ஓலேநீல்ரட் குறிப்பிடுகையில் இவ் வறிக்கையானது இதுவரையில் பகிரங்கமாகவோ அல்லது சர்வதேச ரீதியிலோ குறிப்பிடப்படாத பல பற்றாக்குறைகளை வெளிப்படுத்துகின்றது எனத் தெரிவித்தார்.

இதில் அபாயகரமானதென்னவெனில் ரஷ்ய அணு உலைகளில் 31 மோசமான குறைபாடுகளுடன் உள்ளதாக அடையாளங்காணப்பட்டுள்ளதேயாகும்.

இயற்கை அனர்த்தங்கள் நேரிடும் வேளையில் அங்கு பணிபுரிபவர்கள் எவ்விதம் அதனைக்கையாள வேண்டும் என்ற ஒழுங்குமுறைகள் குறித்து பயிற்சிகள் எதுவும் வழங்கப்படவில்லை. அல்லது விபத்தின் போது வேலையாட்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் போதுமான வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை. தவிர முன்னைய விபத்துகள் குறித்த பதிவேடுகள் பேணப்படாமையால் அவைகுறித்த அனுபவங்களைப் பெறமுடியாமை. மின் வசதி குறித்த குறைவான கவனம், பாதுகாப்புக் குறித்த கவனப் பற்றாக்குறை என்பனவாகும்.

RBMK வடிவமைப்பைக் கொண்ட அணுஉலை செர்னோபிலில் விபத்திற்குள்ளானது. கூடன்குளத்தில் அமையப் பெறும் அணுஉலையும் இது மாதிரியானதொன்றாகும்.

ஆனால் கேள்வி, என்னவெனில் குளிரூட்டும் செயற்பாடுகள் இயங்காதவிடத்து பட்சத்தில் பாதுகாப்பு நிலவரம் என்ன வென்பதேயாகும். அதற்கு உத்தரவாதமில்லை. இதுவே யப்பானில் பூமியதிர்வும், சுனாமியும் ஏற்பட்ட வேளையில் புகுஷிமாவில் ஏற்பட்ட அனர்த்தத்திற்கான அடிப்படைப் பிரச்சினையாகும். அதனைத்தவிர குளிரூட்டும் செயற்பாட்டில் உள்ள உபகரணங்களில் உலோகச் சேர்வும் ஒட்டு வேலைகளின் (Welding) தவறுகளுமேயாகும். அத்துடன் ஐதரசன் வாயுவினால் ஏற்படும் வெடிப்புகளைத் தாங்குமளவிற்கு வலுவுள்ளவையாகக் கட்டட நிர்மாணங்கள் இல்லாமலிருந்தமையுமாகும்.

ரஷ்ய அணுஉலை வடிவமைப்பில் பூமியதிர்வுகளின் ஆபத்துகள் குறித்துக் கருத்திலெடுக்கப்படவில்லை என அவ்வறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியமான அம்சமாகும். அன்றியும் பூமியதிர்வு நிகழுகையில் செயற்பாடுகள் யாவும் தானாகச் செயலிழக்கும்வண்ணம் எதுவும் நிர்மாணிக்கப்படவில்லை. எரிபொருள் கசிவுகளை நிறுத்தக்கூடிய உட்கட்டுமான வசதிகளையும் கொண்டிருக்கவில்லை. இதுவே யப்பானிலும் சம்பவித்தது.

இவ் வெளிப்பாடுகள் யாவும் குற்றம் கூறுவதற்குரியவையே. றொசாறொம்மின் பிரதம அதிகாரியான சேர்ஜி கிறியென்கோ இவ்வுண்மைகளையோ அல்லது பிழைகளையோ மறுக்கவில்லை. ஆனால், வெறுமனே, தவறுகளைச் சீர்செய்ய அதிகளவிலான பணம் தேவை என மட்டும் கூறியுள்ளார். எனினும் பங்குனி 11 ம் திகதி வெளியிடப்பட்ட ரஷ்யாவின் உத்தியோகபூர்வமான அறிக்கையில் புகுஷிமாவில் நடைபெற்றது போன்று ரஷ்யாவில் நடைபெறமாட்டாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை, மாறுபட்ட கருத்தாகவுள்ளது.

ரஷ்யப்பிரதமர் விளாடிமிர்புட்டின் இவைகுறித்துப் பரிசீலிக்கும்படி கட்டளையிட்டமைத் தொடர்ந்து விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படவில்லையெனக் கருதப்படுகிறது.

பூமியதிர்வுகள், சுனாமி, மற்றும் மனிதத் தவறுகளினால் நேரிடக்கூடிய சகல அபாயங்களையும் காப்பாற்றக்கூடிய விதத்தில் சகல இந்திய அணுஉலைகளும் அமையும் என்ற அண்மைய இந்திய அணுசக்தித் திணைக்களத்தின் அறிக்கையினையும் அதற்கு முன்னராக ரஷ்ய அரசாங்கத்தின் அறிக்கையினையும் கூடங்குள மக்கள் நம்புவதற்கு எந்த ஒரு காரணமும் இல்லை.

கூடன்குளத்தில் முதல் இரண்டு அலகுகளும் அமுல் செய்யப்பட முன்னர் அனைத்தையும் உள்ளடக்கியதான சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையொன் றினைத் தயாரித்து உள்ளூர் மக்களுக்கு முன்னதாகவே விளக்கமளித்திருத்தல் வேண்டும். இதுவும் பொதுமக்களின் எதிர்ப்புக் கூர்மையடைந்ததிற்கு இரண்டாவது காரணமாகும்.

1994ம் ஆண்டளவிலேயே சூழல் பாதிப்பு முறை அமுலுக்கு வந்தது. ஆயினும், அதற்கு முன்பதாக 1989இல் சுற்றாடல் மற்றும் வனவள அமைச்சு இது குறித்து தெளிவுபடுத்தியுள்ளது கவனத்திற்குரியது. ஆனால் மின் ஆலைகளுக் கான இடத்தெரிவு அல்லது பொதுமக்களின் பாதுகாப் புக்குறித்த மீளாய்வு அணுமின்சக்தியின் இயற்கையான அபாயங்கள், கதிர்வீச்சு வெளியிடுதல்கள் அல்லது நீண்ட காலத்திற்கான கழிவுத் தேக்கங்கள் குறித்து அறவே கருத்திற்கொள்ளப்படவில்லையென்பது கவனத்திற்கொள்ளவேண்டிய தொன்றாகும்.

அணுமின் நிலையத்தின் அமைவிடத்தில் இருந்து 1.6கி.மீ சுற்றுவட்டாரப் பிரதேசத்தில் மனிதக்குடியிருப்புகளே இருக்கக்கூடாது. மேலும் அதிலிருந்து அடுத்த 5கி.மீ பிரதேசப்பரப்பில் மனித அடர்த்திகுறைந்ததாகவே இருக்க வேண்டும். ஏனெனில், அசம்பாவிதங்களின் போது இடப்பெயர்வு மற்றும் மீள்குடியமர்வு என்பன சுலபமாக அமையும். இறுதியாக குறிப்பிட்ட 1.6கி.மீ சுற்று வட்டாரத்திற்கு அப்பால் உள்ள பகுதியில் சனத்தொகை 10000ற்கும் மேற்படுதல் கூடாது என்பதே உண்மையாகும்.

ஆனால் 1.6கி.மீ தூரத்திற்குள் ஆயிரக்கணக்கான மக்களும் அத்துடன் அண்மையில் சுனாமி புனர்வாழ்வு குடியேற்றத் திட்டத்தில் குடியமர்ந்த 2000 பேரும் உள்ளடங்கலாக வசிப்பதைத் தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது. 5கி.மீ தொலைவிற்குள் கூடன்குளத்தில் 20000மக்கள் அத்துடன் இடிந்தகரையில் 12000 மக்களுமாக இரண்டு பெரிய குடியிருப்புகள் உள்ளன. எவ்வாறாயினும் 16கி.மீ.சுற்று வட்டாரத்திற்குள் ஆகக்குறைந்தது 70000 மக்கள் தொகையினர் உள்ளனர். நிலைமை இவ்வாறிருக்கையில் அரசு எவரும் இடம்பெயரத்தேவையில்லை எனத் தெரிவிக்கின்றது.


ஜெய்தாபூரும் இவ்வகையிலேயே அமைகின்றது. ஆனால் இந்திய அரசு, புகுஷிமா அனர்த்தத்தின் பின்னர் பிரான்ஸ் நாட்டு அணுஉலைகளைக் கொள்வனவு செய்வதை ஒத்திவைத்துள்ளது. (செப்டம்பர்-10, இந்து பத்திரிகை)

சகல வேலைகளும், சமாதானமாக மீளாய்வு செய்து, உறுதிப்படுத்தப்படும்வரையில் நிறுத்தப்படல் வேண்டும். புகுஷிமா அனர்த்தம் உலகிற்கே ஒரு உதாரணமாக அடையாளங்காணப்பட்டுள்ளது. அணுஉலைத் தொழில்நுட்பம் மந்தநிலையை அடைந்தது மட்டுமல்லாது சோர்வு நிலையையும் அடைந்துவிட்டது.

ஜேர்மனி, யப்பான், இத்தாலி, மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் அணுஉலைகள் குறித்து மீள்பரிசீலனை செய்கின்றன. அது மட்டுமல்லாது முதலீட்டு வங்கிகள் புகுஷிமா அனர்த்தத்தின் பின்பு அணுசக்திக்கு ஒரு தெளிவான எதிர்காலம் இல்லையெனக் கூறுகின்றன. எனவே, இவற்றினையெல்லாம் கருத்திற்கொள்ளாது, இந்தியா புதிய அணுத்திட்டங்களை ஆராயாமல் அமுலாக்குவது தற்கொலைக்கு ஒப்பானதே.

இலங்கையின் புத்தளம் மாவட்டத்தின் நுரைச்சோலையில் மக்களின் பலமான எதிர்ப்பினையும் கருதாது அனல்மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தின் சம்பூரிலும் அனல்மின் நிலையம் நிறுவப்படவுள்ளது. இத்தருணத்தில் இவையும் மீளாய்வு செய்யப்படவேண்டியது அவசியமாகிறது. ★

■ ஜெகநாதன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





■ அ.சூரியன்

கலண்டர் படுவேகமாகப் போய்க் கொண்டிருந்தது. செதில் கலவரப்பட்டான். மாறி மாறி பலதரப்பட்ட கட்டளையிடும் பட்டன்களைத் தட்டியவாறு கலண்டருடன் பேசமுற்பட்டான்.

"ஏய் என் அருமைக் கலண்டரே பேசு. ஏன் திரும்ப மறுக்கிறாய். ஏதாவது காரணம் சொல்லு."

சதுயா செதிலையும் கலண்டரின் வெளியைத் திரையையும் மாறிமாறிப் பார்த்தவளாக பதட்டத்துடன் கேட்டாள்.

"என்ன செதில், ஏன் கலண்டர் திசையை மாற்ற



மறுக்கிறது? அதோ ஏதோ ஒரு குகையில் நுழைவது போன்று எம் கலண்டர் விரைகிறதே! என்ன நேர்ந்துவிட்டது இந்த கலண்டருக்கு."

"அதுதான் எனக்கும் புரியவில்லை சதுயா. சற்று முன்னர்தான் தனது திசையை மாற்றுமாறும் இல்லையேல் பிளாக் கோளின் சர்ப்பு விசைக்குள் நாம் அகப்பட்டு விடுவோமென்றும் கலண்டர் எச்சரிக்கை விடுத்தது. ஆனால் இப்ப என்னவென்றால் இது தனது இஸ்டப்படி போவதுபோல பிளாக் கோளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது."

சதுயா மேலும் பயந்தவளாக செதிலின் தோள் தொட்டு– "என்ன செதில் நாம் இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே. ஆயிரம் வருசம் வாழும் வரம் பெற்ற நாம் இப்படி அநியாயமா பிளாக் கோளிற்குள் அகப்பட்டு எமது உயிர விடப் போகிறோமே."

இவள் இவ்வாறு கூற செதிலின் உடலெங்கும் பயத்தில் வியர்வைத் துளிகள் அரும்ப ஆரம்பித்தன.

"எனக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை சதுயா. எந்த ஒரு ஆபத்தையும் தாங்கும் வல்லமை படைத்த இந்தக் கலண்டருக்கு என்னதான் நேர்ந்தது?"

இவன் இவ்வாறு கூறிக் கொண்டிருந்த போது திடீரென்று உயிர்பெற்று விட்டதைப் போன்று கலண்டர் பேச ஆரம்பித்தது.

"என் அருமை நண்பர்களே, என்னால் இயன்ற அளவு முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன். ஆனால் திசை திரும்ப என்னால் முடியவில்லை.

பிளாக் கோள் எம்மை ஈர்க்க ஆரம்பித்து விட்டது. நான் இப்பொழுது வேகமாகச் செல்லவில்லை. அதுதான் தன்னை நோக்கி எம்மை இழுத்துக்கொண்டிருக்கிறது."

செதில் திடுக்கிட்டு - என்ன கூறுகிறாய் கலண்டரே.

சதுயா வெறித்தென்று பார்க்க.

கலண்டர் பதில் தந்தது - மன்னித்து விடுங்கள் என் அருமை நண்பர்களே.....

அது கூறி முடித்தவுடன் திடீரென்று கலண்டரினுள் இருந்த அனைத்து மின் குமிழ்களும் அணைந்துபோக மயான அமைதியுடன் இருள் சூழ்ந்த அந்தக் கலண்டர் என்ற பறக்கும் தட்டு பிளாக் கோளின் கோரப் பிடிக்குள் சிக்கி அதனை நோக்கி மிக மிக வேகமாக போய்க் கொண்டிருந்தது - இல்லையில்லை அதற்குள் விழுந்துகொண்டிருந்தது.

இனி..... அவ்வளவுதானா.......

ஈனஸ்வரத்தில் சதுயா இருட்டில் செதிலைத் துளாவியவளாகிக் இரண்டு சொட்டுக் கண்ணீரைத் தனது கண்களிலிருந்து உதிர்க்க அது அந்த இருளில் செதிலின் முகத்தில் விழுந்து கலண்டரின் துளிக் கண்ணீர் போலன்று உருண்டு வழிந்தது.

★ ★ ★

இதுவரையில் செல்போன் வாயிலாக ஊருக்குள் வந்த மாயாஜைப் பற்றி தருவின் கூறிக் கொண்டிருந்ததை கெல்வியா மலையில் நின்று கேட்டுக்கொண்டிருந்த நிவேதா திடுக்கிட்டு–

லவ்ல சுதா இவன் இப்படிக் கூறுகிறான். என்றாள்.

அதுதான் என்னாலும் நிரணிக்கமுடிய வில்லை. ஊருக்குள்ள மாயமா....? - அவள் குழம்பிப் போய் "டேய் தருவின் என்னடா சொல்லுறா?" என்றாள்.

டேய் சுதா நான் சொன்னதெல்லாம் நிஜமடா. என்ரா பைக்கில் வந்தவன் காற்றில கரைந்தது உண்மை. நான் போன வேகமோ எழுபது கிலோ மீற்றர் இந்த வேகத்திற்கு ஈடுகொடுத்து ஒரு பெண் குதிப்பாளா? அது மட்டுமில்ல எங்கேயாவது விழுந்து விட்டாளோவென்றுகூட நின்று தேடியும் பார்த்தன்டா. ஆனால்.... எங்கேயும் அவள் கிடைக்கவில்லை.

"அப்ப நீ எமக்கு உதவ வரப்போறதில்லை."

"டேய் ஆள விடு எனக்கு பட்டதே குலப்பன் காய்ச்சல் வரை வந்திட்டுது" - என்று கூறிவிட்டு - "சொறிடா" - என்று கூறி செல்போன் தொடர்பைத் துண்டித்தான் தருவின்.

(ஆபத்து தொடரும்)

## காந்தத்தின் மூலம் ஒருவரிடம் இருந்து உண்மையைக் கறக்க முடியும்

காந்தத்தின் மூலம் ஒருவரிடம் இருந்து உண்மையைக் கறக்க முடியும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். இதன்மூலம் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஆனால் வாய் திறக்க மறுக்கிற நபர்களிடம் இருந்து உண்மையை வரவழைத்துவிட முடியும் என்று நம்புகிறார்கள்.

இதுதொடர்பான ஆய்வை மேற்கொண்ட எஸ்தோனிய ஆய்வாளர்கள், காந்தத்தால் மூளையின்



முன்பகுதியைத் தூண்ட முடியும். ஒருவர் பொய் சொல்வதை தடுக்க முடியும் என்கிறார்கள்.

நெற்றிக்கு நேரே பின்புறம் உள்ள டார்சோ லேடரல் பிரிபிரான்டல் கார்டெக்ஸ் என்ற மூளைப் பகுதியை காந்தத்தால் தூண்டுவதன் மூலம் ஒருவரை உண்மை சொல்லவோ, பொய் பேசவோ வைக்க முடியும் என்கிறார்கள். இப்பகுதியின் இடதுபக்கம் அல்லது வலதுபக்கம் என்று எதைத் தூண்டுகிறோம் என்பதைப் பொறுத்தது அது.

ஆனால் மூளையில் பரீட்டல் லோப் பகுதியில் காந்தத்தால் தூண்டுவது, குறிப்பிட்ட மனிதர் முடிவெடுப்பதில் எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். நேர்மை, நீதிநெறி குறித்த ஒருவரின் சிந்தனையை சக்திவாய்ந்த காந்தத்தால் மாற்ற முடியும் என்பது வியப்பு அளிப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

## ஹிட்லர் எங்கே தற்கொலை செய்தார்

உலகையே தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று ஆசைப்பட்ட சர்வாதிகாரி அடொல்ப் ஹிட்லர் மரணமடைந்தது இதுவரை கூறப்படுவது போல ஜேர்மன் தலைநகர் பேர்லினில் அல்ல என்ற புது தகவல் வெளியாகி உள்ளது.

ஹிட்லர் 1945 ஆம் ஆண்டு பேர்லினில் தற்கொலை செய்து உயிரைவிட்டார் என்று கூறப்பட்டு வந்த நிலையில், அவர் பேர்லினில் தற்கொலை செய்யவில்லை என்றும், அர்ஜென்டினாவில் வாழ்ந்து தற்கொலை செய்துகொண்டார் என்றும் புது தகவல் வெளியாகி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களப் புயல்

# நெப்போலியன்



03

[illegible]

வேண்டியிருக்கும். ஆனால், நெப்போலியன் ஐந்து வருடத்தில் அங்கிருந்து வெளியேற வேண்டியதாகி விட்டது.

காரணம், பிரான்ஸ் ராணுவத்துக்கு அவசரமாக, மிக அவசரமாக, பெரும் எண்ணிக்கையில் போர் வீரர்கள் தேவைப்பட்டார்கள்.

அந்தக் கோட்டைக்கு வெளியே போர் நெருப்பும், உள்ளே புரட்சி நெருப்பும் பற்றி எரிந்துகொண்டிருந்தது.

* * *

"எனக்குப் பிறகு இங்கே ஒரு பிரளயம்தான் [illegible] கப்போகிறது" என்றார் பிரான்ஸ் அரசர் பதினைந்தாம் லூயி (Louis XV).

[illegible]

# புரட்சியின் நெருப்பு பற்றியெரியத் தொடங்கியது!

[illegible] இருந்தார்கள். இவர்களை 'ஸ்டேட்' என்று அழைப்பார்கள். முதல் ஸ்டேட், இரண்டாவது ஸ்டேட், மூன்றாவது ஸ்டேட்.

முதல் ஸ்டேட் என்பது சர்ச் / திருச்சபையைச் சார்ந்த தலைவர்கள், மத குருமார்களைக் குறிக்கிறது. இரண்டாவது ஸ்டேட் என்றால், 'உயர்ந்த' வம்சங்களில் பிறந்த 'பிரபு' மக்கள். இவர்களைத் தவிர மிச்சமிருக்கும் எல்லோரும், மூன்றாவது ஸ்டேட்.

மக்கள்தொகை அடிப்படையில் பார்த்தால், பிரான்ஸில் நூற்றுக்குத் [illegible]

[illegible] ரூசோ (Jean Jacques Rousseau), வால்டேர் (Voltaire/ Francois-Marie Arouet), டிடரோட் (Denis Diderot), மான்டெஸ்கியூ (Baron DeMontesquieu) முதலியோர்.

[illegible]

ஆனாலும் முதல் இரண்டு வர்க்கத்தினரிடம் அவருக்குக் கொஞ்சம் பயம் இருந்தது. இது [illegible] தெரிந்தது. இதனால், தெரிந்த [illegible] முறைகள் என்று அவர் அறிமுகப்படுத்திய சீர்திருத்தங்கள் எல்லாமே கடைசியில் மூன்றாம் ஸ்டேட் மக்களை நசுக்கும் முயற்சிகளாகத்தான் தோன்றியது. (தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச் சம்பவம்

# நான் இரண்டாவது ஹிட்லர்

■ ஜெகன்

பேர்னாட் தனது பழைய சைக்கிளில் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தின் கத வருகில் சென்றான். அவனது சைக்கிளில் கெரியரில் ஒரு கோணி மூட்டையும் செடிகளுக்கு மருந்தடிக்கும் தெளிகருவியும் இருந்தன.

மேற்கு ஜேர்மனிக் கொலோன் நகரத்தை அடுத்த வொல்கவன் பகுதியில் ரோமன் கத்தோலிக்கப் பாடசாலை இருந்தது. அதில் நானூறுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயில்கிறார்கள். அப்போது பாடசாலை ஆரம்பமாகி, மாணவ, மாணவிகள் அவ்வப்போது முதல் பாடத்தைக் கவனிக்கத் தொடங்கியிருந்தனர். விளையாட்டு மைதானத்தில் உடற்பயிற்சி ஆசிரியை அன்னாவும் மாணவ மாணவிகள் பலரும் உடற்பயிற்சி வகுப்பில் ஈடுபட்டிருந்தனர்.

உடற்பயிற்சி வகுப்பிற்குத் தாமதமாகி வந்த பதின்மூன்று வயது மாணவன் ஒருவன் பாடசாலை விளையாட்டு மைதானத்தின் பக்கக் கதவினூடாக உட்புகும் வேளையில் பேர்னாட் "நானும் உள்ளே வரலாமா?" என்று கேட்டுக் கொண்டே மாணவனின் பதிலை எதிர்பாராமல், அவன் பின்னால் திறந்த கதவினூடாக உள்புகுந்தான்.

உட்புகுந்த பேர்னாட் சைக்கிளை நிறுத்தினான். கோட் பையிலிருந்து பூட்டு ஒன்றை எடுத்தான். விளையாட்டு மைதானத்தின் கதவுகளை மூடி பூட்டை வைத்து ஆணியால் அறைந்தான். கோணிப் பையை அவிழ்த்தான். அதில் காஸ் சிலிண்டர் ஒன்றும் குத்துவாள் ஒன்றும் இருந்தன. சைக்கிளின் கெரியரில் செருகி இருந்த நான்கு அடி நீளமுள்ள மூங்கில் கம்பை எடுத்தான். அதில் குத்துவாளை கட்டி ஈட்டி போலச் செருகினான்.

காஸ் சிலிண்டரில் தெளிகருவியின் குழாயைப் பொருத்தினான். எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு மைதானத்தில் உடற்பயிற்சி நடக்குமிடத்திற்கு வந்தான். அதுவரைக்கும் அமைதியாக வந்த அவன் திடீரென தெளிகருவியின் முன் குழாயை உடற்பயிற்சி ஆசிரியை அன்னாவை நோக்கி நீட்டியபடி உரத்த குரலில் "நான் இரண்டாவது ஹிட்லர்" என்று கத்தினான்.

மாணவ மாணவிகள் அனைவருமே பதின்மூன்று வயதிற்கு மேற்பட்டவர்கள். ஆசிரியை அன்னாவுக்கு 57 வயதாகிறது. அனைவரும் பேர்னாட்டின் பேய்க் கூச்சலைக் கேட்டுத் திடுக்கிட்டனர். அன்னா குரல் வந்த திசையை நோக்கினாள்.

அவள் ஏதும் சொல்வதற்கு முன்னதாகவே பேர்னாட் தெளிகருவியின் முனையை அன்னாவை நோக்கி நீட்டி விசையை அழுத்தினான். அதிலிருந்து தீச்சுவாலைகள் வேகமாய்ப் பாய்ந்து அன்னாவை நோக்கி வந்தன. அவள் தீப்பிடித்து மரம் போலக் கீழே சாய்ந்தாள்.

காஸ்சிலிண்டரில் தெளிகருவியை இணைத்து அதனை தீயை வீசும் கருவியாக அவன் தயாரித்திருந்தான்.



மாணவ மாணவிகள் கூக்குரலிட்டவண்ணம் ஓடினார்கள். பேர்னாட் தெளிகருவியை அவர்களை நோக்கி நீட்டியவண்ணம் பின்தொடர்ந்தான். தீப்பற்றிய குழந்தைகள் விளையாட்டு மைதானத்தில் இங்குமங்கும் சிதறி ஓடினர். சிலகுழந்தைகள் "அம்மா! அம்மா!" என்று வேதனையால் ஓலமிட்டனர்.

குழந்தைகளின் ஓலக்குரல் பாடசாலையினுள் உள்ளவர்களுக்குக் கேட்கவில்லை. வகுப்பறைகளில் மாணவ மாணவிகளும் ஆசிரியைகளும் வகுப்பு நடத்துவதிலேயே கவனமாக இருந்தனர்.

திடீரென ஓர் வகுப்பறையின் ஜன்னல் கண்ணாடி நொறுங்கி உடைந்து விழுந்து பெரிய ஓசையை உண்டுபண்ணியது. ஜன்னல் கம்பிகள் தீயினால் சிவப்பேறிச் சிதறித் தரையில் விழுந்தன.

ஆசிரியையும், மாணவ மாணவியரும் திடுக்கிட்டுத் திரும்பி ஜன்னல் பக்கம் பார்த்தனர். பேர்னாட் கலைந்த தலையுடன், கண்களில் கனல் பறக்க கொடூர வெறிபிடித்தவனாக நின்றிருந்தான் "நான் இரண்டாவது ஹிட்லர்" என்று மற்றும் ஒரு முறை உரக்கக் கத்தினான்.

மறுகணம், தெளிகருவியிலிருந்து வெளிப்பட்ட தீ வகுப்பறை முழுவதும் பரவியது.

ஆசிரியைதான் முதற்பலி. மாணவ மாணவிகள் பயந்தலறி கூக்குரல் எழுப்பும் சமயம் ஆசிரியை தரையில் சாய்ந்தாள். அவளது உடை தீப்பற்றி எரியத் தொடங்கியது. மாணவ மாணவிகள் பக்கமும் பேர்னாட் தெளிகருவியை நீட்டி விசையை அழுத்தினான். தீ பாய்ந்து வந்து அவர்களையும் தாக்கியது. பலரின் உடைகளில் தீப்பற்றி எரிந்தன. அவர்கள் வேதனையால் புழுப்போலத் துடித்தனர்.

மாணவ மாணவியர் இவ்விதம் துடித்து அலறிய பேரொலி ஒலித்துக் கொண்டிருந்த போதும் நின்று விடாமல் வகுப்பு அறையிலிருந்து சமயமறிந்து வெளியே பாய்ந்த இவர்கள் எழுப்பிய அவலக்குரல் எழுப்பியது பேர்னாட்டுக்கு மகிழ்ச்சியை அளித்தது. அவன் ஆவேசம் வந்தவன் போல் ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஓடினான். தன்முன் எதிர்ப்பட்டவர்களையெல்லாம் தீயினால் குளிப்பாட்டினான். எதிரில் காணும் ஒவ்வொரு பொருளையும் தீக்கு இரையாக்கினான்.

குழந்தைகள் வகுப்பறையிலிருந்து வெளியே அலறிப் புடைத்துகொண்டு ஓடினர். ஓட முடியாதவர்கள் அதிர்ச்சியினால் செயலிழந்து பிரமை பிடித்தவர்களாயினர்.

வகுப்பறையில் இருந்து வெளியே ஓடிய மாணவ மாணவியர் ஏர்கலா மற்றும் பொலின் ஆகியவர்களிடம் விபரத்தைக் கூறினார்கள். அவர்கள் இருவரும்தான் பாடசாலையின் நிர்வாகத்தில் இருப்பவர்கள் 24 வயதான ஏர்கலாவும் 62 வயதான பொலினும்தான் மாணவ மாணவியரின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள். பேர்னாட் தனி ஒருவனாக வகுப்பறைகளுக்குச் சென்று தீ வைக்கிறான் என்பதை அவர்கள் கேட்டறிந்தனர்.

ஓர் அறையினுள் பேர்னாட் நுழைந்தபோது துணிவுடனும் வெகு சாமர்த்தியமாகவும் ஏர்கலாவும் பொலினும் வேகமாகச் சென்று அவனை அறையினுள் விட்டு கதவை மூடிப் பூட்டினர்.

ஆனால் பேர்னாட் வெறுமனே மௌனமாயிருக்கவில்லை. அவன் கதவுகளைத் தன் பலம் கொண்ட மட்டும் இடித்தான். கதவுகள் உடையும் வரை காத்திருக்கவில்லை.

கதவுகள் திறந்து கொண்டதும் ஏர்கலாவையும் பொலினையும் உள்ளே தள்ளினான். குத்துவாளினால் அவர்கள் இருவரையும் வயிற்றில் குத்தினான். அவர்கள் இருவரும் தரையில் கிடந்தபடி உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தனர். ஏர்கலாவுக்கு ஆறு மாதங்களுக்கு முன்புதான் திருமணமாகியிருந்தது. பொலின் பாடசாலைக்கு ஆசிரியைகள் தேவை என்பதால் ஓய்வுபெற்ற பின்னரும் வேலைக்கு வந்திருந்தாள்.

இப்போது வகுப்பறையிலிருந்து அனைவரும் வெளியே ஓடிவிட்டனர். வகுப்பறையிலிருந்த சகலதையும் பேர்னாட் கொளுத்தினான். கதிரை, மேசை, கரும்பலகை, கட்டடம் சகலத்திற்கும் தீ வைத்தான்.

வெளியே ஓடிய மாணவ மாணவியர் தெருவில் போன கார்களை நிறுத்தி தீக்காயம் பட்டவர்களை மருத்துவமனைக்கு எடுத்துப் போகும்படி கெஞ்சினார்கள். அந்நேரம் அவ்வழியால் சென்ற பீட்டர் பாடசாலையில் எழும் குரலைக் கேட்டு உள்ளே ஓடிச் சென்றான். தீ பரவிய வகுப்பறைக்குள் புகுந்து தவித்துக் கொண்டிருந்த தன் மகளையும், ஏனைய ஓரிரண்டு மாணவிகளையும் காப்பாற்றி வெளியில் அழைத்து வந்தான்.

செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவியது. காவல்துறை, தீயணைக்கும் படையினர் மாணவ மாணவியரின் பெற்றோர் ஆகியோர் ஓடோடி வந்தனர்.

அதற்குள் பேர்னாட் வைத்திருந்த காஸ் சிலிண்டரில் இருந்த எரிபொருள் தீர்ந்துவிட்டது. அவன் சிலிண்டரையும், தெளிகருவியையும் அங்கேயே விட்டெறிந்து விட்டு கையில் குத்துவாளுடன் பிரதான மத்தை நோக்கி குறுக்குப் பாதையொன்றினூடாக விரைந்தான்.

பயில் பாலத்தை பேர்னாட் அடையும் போது பழிக்குப் பழி வாங்கத்துடிக்கும் மாணவ மாணவியரின் பெற்றோர்கள் இருநூறு பேரளவில் எதிர்ப்பட்டனர். அவர்களில் ஒருவரிடம் வேட்டைத் துப்பாக்கி இருந்தது அதனால் அவர் பேர்னாட்டை சுட்டார். குறி தவறிவிட்டது.

அவ்விடம் ஒரு காவல்துறை அதிகாரி அவர்களுடன் வந்திருந்தார். அவர் தனது துப்பாக்கியால் பேர்னாட்டைச் சுட்டார். பேர்னாட்டின் தொடையில் குண்டு பாய்ந்தது. அவன் அங்கேயே கீழே விழுந்தான்.

காவல்துறையினர் அவனை நெருங்குவதற்குள் அவன் தனது கோட் பையிலிருந்து ஒரு புட்டியை எடுத்தான். அதிலிருந்து பூச்சிக்கொல்லி மருந்தை முழுவதுமாகக் குடித்துவிட்டான்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பேர்னாட்டிடம் புலன் விசாரணை அதிகாரி கேட்ட போது "எனக்கு கடைசி நேரம் உடல் நலமில்லாதபோதும் அரசாங்கம் அளிக்கும் உதவித் தொகையை அதிகரிக்கும்படி பல முறைகள் கேட்டேன் அரசாங்கம் மறுத்து விட்டது. பலர் செய்தவை தவறுகள் அவர்கள் என்னைக் கொன்றுவிடப் பார்த்தார்கள்" எனக் கூறினான்.


"அதற்கு உன் டாக்டர்களைப் பழிவாங்குவது தானே? ஏன் இந்தக் குழந்தைகளைக் கொளுத்தினாய்?" என விசாரணை அதிகாரி கேட்டார். அக்கேள்விக்கு அவன் ஏதோ பதிலளிக்க முயல்கையில் பேர்னாட்டின் உயிர் பிரிந்தது.

தீப்புண்பட்ட முப்பத்தெட்டுப் பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 14 பேர் மாண்டு போயினர். சிலருக்கு அதிகமான தீக்காயங்கள், மற்றும் சிலருக்கோ வாழ்க்கை முழுவதும் அவதிப்படும்படி முகம் அலங்கோலமாக விகாரமடைந்து உருமாறியிருந்தது.

பேர்னாட்டின் உயிர் பிரியும் வேளையில் வைத்திய அதிகாரியிடம் கூற முயன்றது என்ன என்பதை அறிய முடியாமல் போய்விட்டது. இல்லையெனில் அவனது இந்தக் கொடூரச் செயலுக்கான புதிர் வெளியாகியிருக்கும்! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைபிரியாக் காதலர்கள்



இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்ததாகக் கருதப்படும் இரு காதலர்களின் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த எலும்புக் கூடுகளை இத்தாலிய மாளிகைக் காணியில் உள்ள புதைகுழியில் இருந்து வேலையாட்கள் கண்டெடுத்தனர்.

இவர்கள் மரணிக்கும் கணப்பொழுதில் தங்களது கைகளை பிடித்த வண்ணம் இருந்துள்ளனர். அவர்கள் இறந்த அதேநிலையில் புதைகுழியில் அடக்கம் செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. இத்தாலியின் மொடெனா மாளிகையின் சுவர் அருகில் உரோம சாம்ராஜ்யத்தின் இறுதிக் காலப்பகுதியில் அரச குடும்பத்தினர் இவ்வாறு அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

இந்தக் காதலர்களது எலும்புக் கூடு தற்போது ஒரே பக்கத்தைப் பார்ப்பதாக உள்ளது. அது அவ்வாறு இல்லை எனவும் பெண் தனது காதலனை அன்போடு பார்த்த வண்ணம் இறந்திருக்க வேண்டும் அல்லது இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவாறு இறந்திருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். காலப்போக்கில் உடல் சிதைவடையும் போது ஆணின் முதுகெலும்பு சிதைவடைந்ததால் தலையோடு திரும்பி இருக்கலாம் என கருதப்படுகிறது. கி.பி 500ம் ஆண்டில் இச்சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாமெனப் புதை பொருள் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.


Hotel & Gastro formation



ஹோட்டல் துறையில் மேல்ப் படிப்பு இலவசம்

புறகிறஸ்சோ - இலவசம் - தொழில் மற்றும் துறைசார் நிபுணத்துவம்.

ஹோட்டல் முகாமைத்துவம், சமையல் மற்றும் சர்வர் வேலைகளுக்கான தொழில் பயிற்சிகள். படிப்புக் காலங்களுக்கு வேலையிடத்தில் விடுமுறை பெற்றுத் தரப்படும்.


நேரடியாக இணையத்தில் அல்லது தொலைபேசி மூலம் பதிவு செய்யலாம்.

www.progresso-lehrgang.ch

Hotel & Gastro formation | Eichstrasse 20 | 6353 Weggis
Telefon +41 (0)41 392 77 33 | Fax +41 (0)41 392 77 70
progresso@hotelgastro.ch | www.progresso-lehrgang.ch



## புதிய தலைமுறைத் தளபாடங்களை அறிமுகம்




[illegible]



# Sudar Oli

வார மலரை ஐரோப்பாவில்
தபால் செலவை மட்டும் செலுத்தி வாராந்தம்
இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.
பிறந்தநாள் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள்
மற்றும் அனைத்து விளம்பரங்களும்

Sudaroli, Post fach 60,
4302 August, Switzerland,
Tel: 0041 61813 15 52

Mail: info@tamilkadai.ch



உலகின் முதலாவது பல மொழி தமிழ் அகராதி, தமிழ், ஆங்கிலம், டொச், பிரெஞ்ச், இத்தாலி, நெதர்லாந்த், டெனிஸ், சுவீடிஸ், சிங்களம் ஆகிய பத்து மொழிகளைக் கொண்ட அகராதி. உங்கள் கைபடக்கத் தொலைபேசியில் பதித்துக்கொள்ளலாம்,

மொழி பயில்பவர்கள், பாடசாலை மாணவர்கள், ஐரோப்பிய சுற்றுலா பயணம் செய்பவர்கள் அவசியம் வைத்திருக்க வேண்டிய ஒரு மென்பொருள்.

தொடர்புகளுக்கு சுதர்ஒளி மாவிலர்,

இலங்கைத் தொடர்புகளுக்கு 077 266 56 25,

Tel. 0041 61 813 15 52

www.tamilkadai.ch

உங்கள் கைபேசியில்

Handy

10 மொழி அகராதி



Sprache Wörterbuch

ஏஜென்டுகளுக்கு நல்ல கமிசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகில் மறைந்துள்ள ஆபத்துக்கள்



இன்றைய இளம் தலைமுறைப் பெண்கள் தலைக்கு வர்ணம் அடிக்கவும் மெஹந்தி போடவும் ஆர்வம் காட்டுகின்றனர். உடலில் டாட்டூ வரைந்து கொள்வதும் இன்றைய இளைஞர்களிடையே நாகரிகமாகிப் பெருகிறது.

நமது உடலில் உள்ள மரபணுவை நேரடியாக சென்று தாக்கக் கூடிய கார்சினோஜீனிக் என்னும் ரசாயனம் ஹேர் டையில் கலக்கப்படுவதால் அவற்றைத் தலைக்கு தடவும் போது தலைமுடிகளில் வேர் பகுதிகளின் மூலம் உடலில் ஊடுருவி ரத்தத்தில் கலந்து விடுகின்றன. கார்சினோஜீனிக் நச்சுப்பொருட்கள் சிறுநீரகப்பையில் நிரந்தரமாக தங்கிவிடுவதால் இவை லிம்போமா என்னும் புற்றுநோய் ஏற்படக் காரணமாகிறது என்கின்றனர் புற்றுநோய் வல்லுநர்கள். பிற வண்ணங்களைக் காட்டிலும் கருப்புநிற சாயங்களில் புற்றுநோயை ஏற்படுத்தும் நச்சுப்பொருட்கள் அதிகம் உள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது மட்டுமல்லாது அடர்த்தியான கூந்தல் வேண்டும் என்பதற்காகவும், நிறம் கிடைக்கவேண்டும் என்பதற்காகவும் பெண்கள் செயற்கை மருதாணி எனப்படும் ஹென்னாவை பயன்படுத்துகின்றனர். இந்த ஹென்னாவில் கலக்கப்படும் பென்சின் ரசாயனம்தான் லூக்கிமியா எனப்படும் ரத்தம் மற்றும் எலும்பு மஜ்ஜை புற்றுநோய் பாதிப்பிற்கு காரணமாகிறது. அழகுக்காக டாட்டூ வரைந்து கொள்வதும் ஆபத்தானது என்கின்றனர் புற்றுநோய் மருத்துவர்கள்.

# சண்டையா? சமாதானமாக வழி!

கணவன், மனைவி என்று இருந்தால் சண்டையில்லாமல் இருக்காது. சண்டை போட்டால் சமாதானம் ஆகும் வழியைத் தான் பார்க்க வேண்டுமே தவிர பிரச்சனையை பெரிதுபடுத்த முயற்சிக்கக் கூடாது.

தவறு உங்கள் மீது தான் இருக்கிறது என்று தெரிந்தால் நீங்களாகவே முன்வந்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் மனசில் வைக்காதீர்கள் என்று கூறலாம். அவர் கண்டிப்பாக மன்னித்துவிடுவார். மாறாக ஈகோ பார்த்தால் பிரச்சனை தான் பெரிதாகும். கணவன் மனைவிக்குள் ஈகோ பார்க்கக் கூடாது.

சண்டை போட்டால் ஆளுக்கொரு அறையில் இருக்காதீர்கள். கணவர் அருகில் அமர்ந்து அவரது கையை எடுத்து உங்கள் கையில் வைத்துக் கொண்டு ஏதோ திடீர் என்று கோபம் வந்துவிட்டது. அதனால் கத்திவிட்டேன். என் கோபம் 5 நிமிடம் தான் என்று சொல்லிப் பாருங்கள். அவருக்குத் தானாகவே சிரிப்பு வந்துவிடும்.

நீங்க மட்டும் கோபம் வந்தா குதிக்கிறீங்களே என்று அவர் சமாதானம் ஆகிய பின்னர் கூறுங்கள். அடுத்த முறை அவர் கோபத்தை அடக்க முயற்சிப்பார்.



அதைவிட்டுவிட்டு அவர் கோபத்தில் இருக்கையில் ஏட்டிக்குப் போட்டியாக பேசினீர்கள் என்றால் உறவுதான் கெடும். பொறுமையாக இருப்பதால் நீங்கள் ஒன்றையும் இழந்துவிடப் போவதில்லை.

சண்டை போட்டால் பெண்கள் ஒரு ஓரமாகப் போய் உட்கார்ந்துகொள்வார்கள். கணவர் தன்னை சமாதானப் படுத்த வருகிறாரா என்று ஓரக்கண்ணால் பார்ப்பார்கள். அந்நேரம் நீங்கள் உங்கள் மனைவி அருகில் சென்று அவர் தோளில் கையைப் போட்டு அன்பாகப் பேசினாலே போதும் அவர் கோபம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

கணவன், மனைவிக்குள் அடிக்கடி சண்டை வருவது சகஜம் தான். ஆனால் அதை அப்பொழுதே மறந்துவிடுவது உங்கள் உறவுக்கு நல்லது. சின்னச் சின்ன விட்டுக் கொடுத்தல்கள், கொஞ்சல்கள், கெஞ்சல்கள், பாச மழை என பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி ஊடல்களை விரட்டி விட்டு கூடல்களுக்கு வித்திட முடியும். காதலர்கள் தான் மணிக்கணக்கில் பேச வேண்டும் என்று விதி ஒன்றும் இல்லை. கணவனும், மனைவியும் கூட மணிக்கணக்கில் காதல் மொழி பேசலாம். பேசப் பேசத்தான் உறவுகள் பலமாகும், வலுவாகும். அப்புறம் என்ன. வீட்டிலே சண்டையா, பேசிப் பிரச்சினையை சரி செய்யப் பாருங்கள்...!

# குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கா?



...தைகள் காலில் ... விடுங்கள்.

குட்டிகளால் வயிறு வலித்து அடிக்கடி மலம் கழிக்கும் குழந்தைகளுக்கு வெந்தயத்தை வறுத்துப் பொடி செய்து தேனில் குழைத்து சாப்பிட்டால் உடனே நின்று விடும். 3 வயது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இதனைக் கொடுக்கலாம்.

வயிறு உப்புதல் ஏற்பட்ட குழந்தைகளுக்கு கக்கு வெந்நீரில் சர்க்கரை கலந்து கொடுத்தால் மலம் கழித்து உப்புதல் குறையும்.

தாய்ப்பால் குழந்தைகளுக்கு ஏற்றதா ... என்பதை அறிய அதனை நீரில் சிறிதளவு விட்டுப் பார்க்கவும். நீருடன் கலக்காமல் பால் தனித்திருந்தால் குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை யென்று அர்த்தம்.

# நூறு வயது வரை வாழ...

நூறு வயதுவரை வாழ்வதற்கு யாருக்குத் தான் ஆசை இருக்காது. ஆனால் அதற்கான நடைமுறைகளை செயற்படுத்த வழியில் தான் பலர் தோற்றுப் போகின்றனர்.

ஆயுளை அதிகரிக்கக் கடினமான சில விடயங்களைச் செயற்படுத்தி ஓர் இரு தினங்களிலேயே அவற்றை கைவிட்டவர்களே அதிகம்.

ஆனால் இங்கு குறிப்பிடும் ஏழு நடைமுறைக் குறிப்புக்களை பின்பற்றிப் பாருங்கள். உங்கள் உடல் நிலையில் மாற்றம் ஏற்படும்.

- ★ இடையைக் குறைத்தல்
- ★ புகைத்தலைத் தவிர்த்தல்
- ★ உணவில் கொழுப்புச் சத்தைக் குறைத்தல்
- ★ ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளல்
- ★ நீரிழிவு கட்டுப்பாடு
- ★ சுறுசுறுப்பான வாழ்க்கை
- ★ பழங்களை அதிகம் உண்ணுதல்

அன்றாட வாழ்க்கையில் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்வதன் மூலம் இதனை சாதிக்கலாம் என வைத்திய நிபுணர்களும் தெரிவித்துள்ளனர்.



# நடனத்தால் வரும் நன்மை



உலகம் முழுவதும் சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்குத் தீர்வு காணும் வகையில் தொடர் ஆய்வுகள் நடந்து வருகின்றன. இதை செய்யுங்கள். அதை செய்யாதீர்கள் என்று ஆய்வுக்குப் பிறகு அட்வைஸ்களும் அடிக்கடி வருகின்றன. டான்ஸ் ஆடினால் சர்க்கரை நோய் கட்டுப்படுகிறது என்று புதிய ஆய்வில் தெரியவந்திருக்கிறது.

அமெரிக்காவின் பென்சில்வேனியா நர்சிங் கல்லூரியில் பேராசிரியர் டெ... தலைமையில் இதுதொடர்பான ஆய்வு நடந்தது. சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஆண், பெண் இருபாலாரிடத்திலும் முதல்கட்ட ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. வாரத்துக்கு 4 மணி முதல் 6 மணி நேரம் வரை நடனம் ஆட அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஒரு மாதம் வரை அவர்கள் இவ்வாறு நடனம் ஆடினர். இதில் அவர்களது சர்க்கரை நோய் பாதிப்பு ஓரளவு கட்டுக்குள் வந்தது தெரிய வந்தது. அவர்களது உடல் எடையும் கணிசமாக குறைந்திருந்தது. இதுகுறித்து டெ...ரி கூறுகையில், முறையான உடல் உழைப்பு, மன அழுத்தம், உணவு கட்டுப்பாடு இல்லாமை, முறையான உடற் பயிற்சிகள் இல்லாதது ஆகியவையே சர்க்கரை நோய்க்கு முக்கிய காரணம். தினமும் ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி நடனமாடினால், உடலுக்குப் போதிய பயிற்சி கிடைக்கிறது. மன அழுத்தம் நீங்கி மனம் லேசாகிறது. உடலும் மனமும் சுறுசுறுப்பாக இருக்கிறது. இதனால் சர்க்கரை நோய்ப் பாதிப்பு கட்டுப்படுகிறது. பருமன் ஆகாமல் உடலை ஸ்லிம்மாக வைத்திருக்கவும் நடனம் உதவுகிறது என்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## ஏக்கங்கள்



பிஞ்சுக்கனவுகள்
விடைபெற்றுப்போய் நினைவுகளுடன்
அழுது புலம்புகிறது!

கலாசாரம்
தெருவுக்கு வந்து
அந்தரங்க வார்த்தைகளை
மேடையேற்றிக் கொண்டிருக்கிறது!

பெண்ணிடம்
பணத்துக்கு அடிமைப்பட்டு
மனை மரணசாசனத்தில் பதிவு செய்கிறது!

வாழ்க்கை
வறுமையுடன் வழியோடி
பசியுடன் ஆயுளும் பரிதவித்துச் செய்கிறது!

சமத்துவம்
வாய்ப்புக்களைத் தொலைத்து
விழிபலுடன் நேர்முகம் செய்கிறது!

வெளிச்சம்
தொலைக்கப்பட்ட தமிழரின் வாழ்வில்
வெறுமையே தொடர்கதையாகிறது!

– ஜே.எஸ்.ராஜ்
யாழ்.பல்கலைக்கழகம்.

## தொப்புள் கொடி உறவு


துஸ்யந்தன்.

தாயின் கருவறையில் கருவில்
உருவான நான் முதல் தொட்டு மறக்கப்படாத
வேதமே அம்மாதான்

பெற்றெடுத்து உச்சிமுகர்ந்து வளர்த்து
உருவம் கொடுத்த உயிர் மூலமான
புனிதக் கோவிலில் அவள் முகம்

மானிட வாழ்வுப் புள்ளியில் -மனிதங்களைத்
தொலைத்த மனிதரோடு
என் நாட்கள் கரைந்து போகின்றன
என் கண்ணீர் தாயன்புக்காக கரைந்தோடுகின்றது

என் நினைவுகளின் சங்கமிப்பில்
அம்மாவின் கனவை ஆசையை நிறைவேற்றும் எண்ணம்
காலக்கண்ணாடியில் அம்மாவின் புன்னகை முகம் மறையாது
என் நெஞ்சோடு என் உயிர் பிரியும் வரை...
தொப்புள் கொடி உறவு அம்மா.



## பூக்கள்



மொட்டாய்
மொட்டுக்குள் தேனாய்
மலராய்
மலருக்குள் மணமாய்
இதழாய்
இதழ்களின் அழகாய்
ஆதவ கதிர்களில்
விரியும் பூவே
ஆண்டவன் திருவடி
அணைப்பாய்! சிரிப்பாய்!

– ரா.சிவலிங்கன்
நீர்வேலி அத்தியார்
இந்துக்கல்லூரி.


## கோதை கொடுத்த வலிகள்

அவளை மான் என்றான்
இவன் வலையிலே விழுந்து போனான்.
அவளை மீன் என்றான்
இவன் கண்ணீரில் நீந்திப் போனான்
அவளை இதயம் என்றான்
இவன் ஓட்டையாய்ப் போனான்
அவளைக் கனி என்றான்
இவன் அழுகிப் போனான்
அவளை வார்த்தை என்றான்
இவன் மெத்தனமாய்ப் போனான்
அவளை ஏணி என்றான்
இவன் ஏற முடியாது போனான்
அவளைத் தென்றல் என்றான்
இவன் திசையற்றுப் போனான்
அவளைக் கொடி என்றான்
இவன் ஒடிந்து போனான்
அவளைப் பச்சை மரம் என்றான்
இவன் பட்டுப் போனான்
அவளை அரசி என்றான்
இவன் அடங்கிப் போனான்.



– ஜெயசி ஜெகன்
புதுக்குடியிருப்பு.

## ஒரு கைதியின் டயரி



கருத்துச் சித்திரம்
கழுவேற்றப்பட்டது
எழுதப்படாத
சட்டங்கள்
எங்கள் விதிகளால்
சுமைக்கப்படுகின்றன
ஆயுட்காலங்களும்
எங்களை
ஆட்கொள்கின்றன.

விலங்கிடப்பட்ட
எங்கள் கரங்கள்
விசைத் தூக்கின்றன.
தேம்பல்களே
எம் தேடல்களை
ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

கு.நாகேஸ்வரா
ரண்டி[illegible]

## படமும் பாடும்

ஒலியின்றி
வெளிச்சத்தில்
பட்டப்பகலில்
படப்பிடிப்பு
வினவினால்...!
விதியின் மேல்
பழி போட்டு
வலி சுமந்தவர்களை
விட்டு விட்டால்
வெளிப்படுத்தி
வழி காட்டி
தெளிப் படுத்தவாம்.

– சாரங்கன்.
சாவகச்சேரி.

## போலி வேடம்

அமுதலை ஊட்டிய அன்னை அரை நேரத்து
அன்னமின்றி அங்கலாய்க்க
மருந்துகளை கிடையாமல் மன்றாடித் தெருவோரம்
மற்றோரிடம் கையேந்த
உருப்பசி போடியே உடைந்து எலும்பாய்
உருக்குலைந் திருந்திழைக்க
கல்யாணம் விசிட நாளு சங்கிலி தூங்க மகன்
அன்னதானம்! ஐயகோ.....



– வைசப் புலவர்
மா.கனநாதன்
அராலி வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தனுஷின் ஆஸ்தான இயக்குனர் படத்தில் சிம்பு!

வெற்றிமாறன் அடுத்து இயக்கப் போவது சிம்பு வைத்தானாம். இந்தப் படத்தை தயாநிதி அழகிரியின் 'க்ளவுட் நைன்' தயாரிக்கிறது. படத்தின் பட்ஜெட் ரூ 25 கோடி என கூறப்படுகிறது. சிம்பு படம் ஒன்று இவ்வளவு பெரிய பட்ஜெட்டில் தயாராவது இதுதான் முதல்முறை. படத்தின் கதை சரித்திரப் பின்னணி கொண்டதாம். இந் தக் கதையை தனுஷுக்காகத்தான் வெற்றிமாறன் முதலில் தயார் செய்திருந்தாராம். சிலபல காரணங்களால் சிம் புவை 'கமிட்' செய்து விட்டதாக தகவல்கள் கூறுகின்றன.



## பரபரப்புக்காக நடிக்க மாட்டேன் : விஷ்ணுப்பிரியா

பார்ப்பதற்கு மொடர்ன் பெண்ணாக இருந்தாலும், குடும்பப்பாங்கான வேடம்தான் என் சொய்ஸ். பரபரப்பு ஏற்படுத்த வேண்டும் என்று, வந்த கேரக்டரை எல்லாம் ஏற்க மாட்டேன் என்று நடிகை விஷ்ணுப்பிரியா கூறியிருக்கிறார்.



## ஹிட் கொடுத்தால் சம்பளம் உயரும்

ஒரு படம் வெற்றியடையும்போது அதில் நடித்த நடிகையின் சம்பளம் தானாகவே உயரும். எனக்கும் உயர்ந்திருக்கிறது. தமிழில் தீவிரமாக கவனம் செலுத் தப் போகிறேன். மலையாளத்தில் எனக்கு பேமிலி இமேஜ் இருக்கிறது. தமிழில் கிளாமர் இமேஜ் இருக்கிறது. தெலுங்கில் கமர்சியல் இமேஜ். இப்படி மொழிக்கு ஒரு இமேஜுடன் நடித்து வருகிறேன் என்கிறார் நடிகை லக்சுமிராய்.

## சகுனி படத்தில் கார்த்தி வில்லன் இல்லை!



மகாபாரதத்தில், கிருஷ்ண பரமாத்மாவுக்கு ஈடான நியாயவான் சகுனிதான். அந்த குணாதிசயத்தைத் தான் இந்த படத்தில் கார்த்தியின் கதாபாத்திரத்துக்கு எடுத்துக்கொண்டேன். படத்தின் தலைப்பை பார்த்து, கார்த்தியை வில்லன் என்று கருத வேண்டாம். என்றார் இயக்குநர்.



## இசையமைத்து, பாட்டு பாட ஆசைப்படும் ஸ்ருதிஹாசன்!

கமல்ஹாசனின் மூத்த மகள் ஸ்ருதி ஹாசன் தனது நீண்ட நாள் ஆசையை வெளிப்படுத்தியிருக்கிறார். அதில், நான் கதாநாயகியாக நடிக்கும் படம் ஒன்றுக்கு நானே இசையமைத்து அதில் குறைந்தது ஒரு பாடலாவது பாட வேண்டும், என்று கூறியிருக்கிறார்.

## பிரகாஷ்ராஜின் தோனியில் தோனி.



இப்போது இயக்குநராக மாறியிருக்கும் நடிகர் பிரகாஷ் ராஜ், இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் தோனியின் பெயரை வைத்து தோனி என்ற படத்தை தமிழ் மற்றும் தெலுங்கு மொழியில் இயக்கி வருகிறார். இதுதொடர்பாக தோனி யிடமும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறதாம். ஒருவேளை தோனி ஒப்புக் கொண்டால் அவர் நடிக்கும் முதல் படம் தோனியாகத்தான் இருக்கும்.

## பிறமொழித் திரைப்படம்

அதிகாலையின் நிஸப்தம். விடுதியில் தங்கிப் படிக்கும் இளம் பெண்கள் இருவர் ஒருவித பதற்றத்தோடு எதற்கோ தயாராகிறார்கள். குழப்பத்தோடு ஒவ்வொரு பொருளாக எடுத்து வைக்கிறார்கள். விடுதியிலேயே உள்ள கருப்புச் சந்தையில் ரகசியமாகச் சில பொருட்களை வாங்குகிறார்கள். அந்தப் பெண்களுக்கு என்ன பிரச்சினை? எதற்காகச் செல்கிறார்கள் என்பது தெரிய வில்லை. பக்கத்து ஊரில் உள்ள ஹோட்டலில் அறை ஏற்பாடு செய்கிறார்கள் என்பது மட்டும் மெல்ல மெல்ல புரிகிறது. ஹோட்டலில் அறை தர மறுக்கிறார்கள். வேறு ஹோட்டலில் அதிக பணம் கொடுத்து அறைக்குள் நுழை கிறார்கள். இரு பெண்களில் ஒருத்தியின் (கதாநாயகியின் தோழி) கர்ப்பத்தைக் கலைக்கவே அங்கு வந்திருக்கிறார்கள் என்பது பிறகுதான் தெரிய வருகிறது.




கருவைக் கலைப்பதற்காக மர்ம ஆசாமி ஒருவன் ரகசியமாக வருகிறான். அவன் முறைப்படி பயிற்சி பெற்ற மருத்துவர் அல்ல. ஆனால் ரகசியமாகக் கருக் கலைப்பதில் வல்லவன் என்று எப்படியோ கேள்விப்பட்டு அவனைத் தேடிப்பிடித்திருக்கின்றனர். அவனுக்குத் தரவேண்டிய பணத்தைக்கூட மிகவும் சிறமப்பட்டே சேர்த்திருக்கிறாள் கதாநாயகி. அந்த ஆசாமியோ கடைசி சேரத்தில் அந்தப் பணம் போதாது என்று சொல்லி அதற்கும் மேலே ஏதோ ஏதோ கேட்கிறான். இரு பெண்களும் நிலைகுலைந்து திகைக்கின்றனர். அவன் கேட்ட விலை அப்பெண்களுடனான பாலியல் உறவு. ஆனால் வேறு வழியில்லை. காரணம்... அவர்கள் வாழ்வது ரொமேனியாவில். 1970-80 காலத்தில். அப்போது பல கொடுமைகளை நிகழ்த்திக் கொண்டிருந்தார் நிக்கோலாய் ஸெஸஸ்கோ என்ற ஆட்சியாளர். 1966 முதல் 1989 வரை ஸெஸஸ்கோவின் அரசு செயற்கை கருத்தடை மற்றும் கருக்கலைப்பை தடை செய்திருந்தது. மீறிச் செய்தால் கொலைக்குற்றமாகவே கருதப்படும்.

நீங்கள் கொடுக்கும் சொற்ப பணத்துக்காக மட்டும் கருக்கலைப்பை செய்ய முடியாது. மாட்டிக்கொண்டால் 10 வருடங்கள் சிறையில் காய்ந்த ரொட்டி சாப்பிட வேண்டி வரும் என்று தன் செயலை நியாயப் படுத்துகிறான் அந்த ஆசாமி. ஆகவே துளிகூட விருப்பமில்லாமல் தங்களது உடலையே கட்டணமாகக் கொடுத்து ஒரு கருவைக் கலைக்க வேண்டிய கொடுமை அந்தப் பெண்களுக்கு.

ஒருவழியாக அதெல்லாம் முடிந்து கருக்கலைப்பு வேளைகள் தொடங்குகின்றன. இன்னும் ஒரு மணிநேரத்தில் கரு கலைந்து வெளியே வந்து விடும் என்று சொல்லி விட்டு வெளியேறுகிறான் அந்த ஆசாமி. என்ன ஆகப் போகிறதோ என்று கலக்கத்துடன் காத்திருக்கின்றனர் இருவரும். இதற்கிடையே கதாநாயகி தன் காதலனைச் சந்திக்க வேண்டிவருகின்றது. வற்புறுத்தலின்பேரில் அவனது தாயின் பிறந்த நாள் பார்ட்டியில் பங்கேற்கச் செல்கிறாள்... அவளின் எண்ணமெல்லாம் கருக்கலைப்பு முடிந்து மயக்க நிலையில் அறையில் தனியே இருக்கும் தோழியைச் சுற்றியே இருக்கிறது.

விருந்து முடிந்து அறைக்குள் கிடக்கும் சிநேகிதியைக் காண வருகிறாள். கதவைத் திறந்தால் அவளைக் காணவில்லை. மீண்டும் பதற்றம்... தேடியலைந்த பின் உணவகத்தில் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் தோழியைக் கண்டு என்ன ஆச்சு என்று பதறுகிறாள். அவள் ஒரு கூடையைக் காட்டுகிறாள். அதில் கலைக்கப்பட்ட அந்த கருக்குழந்தை. அதை அப்புறப்படுத்தி விட்டு மீண்டும் விடுதிக்குப் போய்ச் சேர்கிறார்கள். இரவு தன் அமைதிக் காற்றை வீசிக் கொண்டே நீள்கிறது.

அதென்ன படத்தின் தலைப்பு 4 மன்த்ஸ் 3வீக்ஸ் அண்ட் 2 டேஸ்.? கருக்கலைப்பு செய்யப்பட்ட சிசுவின் வயதுதான் அது. கான் திரைப்பட விழாவில் மிகச் சிறந்த படத்துக்கான தங்கப்பேனை வென்ற படம் இது. நேரடியாக கொடுங்கோல் ஆட்சி பற்றியோ கொடுமைகளையோ சொல்லாமல் தனிநபர்களின் அனுபவங்கள் மூலமாக மிக நுட்பமாக அந்தக் கால கட்டம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 15 ஆண்டுகளுக்கு முன் தன் சிநேகிதி கூறிய அனுபவத்தை வைத்து ஒரே மாத த்தில் திரைக்கதை எழுதியதாக இயக்குநர் கிரிஸ்டியான் மிங்கியு சொல்கிறார்.

## காதல் பற்றி கூற மாட்டேன்



தமிழில் தீராத விளையாட்டுப் பிள்ளை படத்தில் விஷால் ஜோடியாக நடித்தவர் சாரா ஜானே டயஸ். அவரிடம், கிரிக்கெட் வீரர் விராத் கோஹ்லியை காதலிக்கிறீர்களாமே என்று கேட்டதும் இதற்கு பதில் சொல்ல விரும்பவில்லை என்றார்.



## படம் இல்லாமல் தவிக்கும் தமன்னா!

சில மாதங்களுக்கு முன் தமிழ் மற்றும் தெலுங்கு பட உலகின் முன்னணி நடிகையாக இருந்த தமன்னாவிற்கு இப்போது படங்களே இல்லையாம். தமன்னாவின் தெலுங்கு மார்க்கெட்டும் கேள்விக்குறியாகியிருக்கிறது.

## பில்லா 2 சண்டை காட்சி ஷூட்டிங்கில் அஜீத் காயம்!



பில்லா-2 படத்தின் ஷூட்டிங் கோவாவில் நடந்து வருகிறது. இப் படத்துக்காக வில்லன் கூட்டத்துடன் அஜீத் நடித்த சண்டை காட்சி படமாக்கப்பட்ட போது பாட்டில் துண்டுகள் உடைந்து அவரது கையை கிழித்தன. இதனால் ஷூட்டிங் பாதிக்கவில்லை. சில மணி நேர ஓய்வுக்கு பிறகு அவர் ஷூட்டிங்கில் பங்கேற்றார் என்றார்.

## மீண்டும் நடிக்க வருமே



நல்ல வேடங்களில் ந த்து பல ஆண்டுகள் ஹீரே யினாக நிலைத்திருந்தேன் மீண்டும் நடிக்க வரும் என ணம் இருக்கிறது. சவாலா வேடங்களில் நடிப்பே என்று சமீபத்தில் பேஷ ஷோவில் பங்கேற்ற நடி ரம்பா கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனம்



## வர்ணம்

செக்ஸ் வெறி பிடித்தவர்களுக்கு மட்டுமல்ல... ஜாதி வெறி பிடித்தவர்களுக்கும் சரியான சம்மட்டி அடியாக வெளிவந்திருக்கும் படம் தான் வர்ணம்! அப்பா, ஜாதிக்காக உயிரைக் கொடுக்க, அவர் வழி வந்த பிள்ளை, விவரம் புரியாத வயதிலேயே ஜாதி வெறி பிடித்து அலைகிறார். எல்லாம் தன்னுடன் படிக்கும் கீழ்ஜாதி பெண் மீது காதல் வரும் வரை தான். தனக்கு அடைக்கலம் தந்த ஜாதி திமிர் பிடித்த தன் மாமாவையே அந்த காதலால், ஒரு கட்டத்தில் எதிர்க்கிறார் ஹீரோ! விடுவாரா ஊர் பெரிய மனிதரான மாமா. ஹீரோவின் காதலியை சீரழிப்பதுடன், காதலியின் அண்ணனையும் அசிங்கப்படுத்துகிறார். இதற்கு பழிக்கு பழியாக மாமாவிற்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணை அவரது கீழ்ஜாதி காதலருடன் தப்பி பிழைக்க விடுகிறார் ஹீரோ! அப்புறம்? அப்புறமென்ன...? மாமா ஹீரோவைக் கொன்றாரா? ஹீரோ வென்றாரா? என்பது க்ளைமாக்ஸ்! பள்ளி மாணவர் மணியாக ஹீரோவாக புதுமுகம் கிரி, ஜாதிவெறி பிடித்த இளைஞனாக காதலுக்கு முன் சீறிப்பாய்ந்திருக்கிறார் என்றால், காதலுக்குப் பின் கசிந்து உருகி தமிழ் சினிமாவில் தனக்கு சரியான எதிர்காலம் இருக்கிறது என்பதை நிருபித்திருக்கிறார். வில்லன் மாமாவாக, ஊர் பெரிய மனிதராக நடிகர் சம்பத்தும், நரம்பு புடைக்க வில்லத்தனத்தில் வென்றிருக்கிறார். நாயகிகள் மோனிகா -அஸ்வதா இருவரில் சிலந்தி மோனிகா, ஷகிலா ரேஞ்சுக்கு காதல் காட்சிகள் என்ற போர்வையில் காமக்காட்சிகளில் இறங்கி வந்து நடித்திருக்கிறார் என்றால், தங்கமாக பள்ளி மாணவியாக வரும் அஸ்வதா, சாவித்திரி அளவிற்கு உருக்கமாக நடிக்க முயன்றிருக்கிறார். அன்வராக - ஆதிஷ், நந்தா - விஜய், ரத்னம் - முத்துக்குமார், முனியாண்டி சாமியாக - கராத்தே ராஜா உள்ளிட்டவர்களும் பாத்திரமறிந்து பளிச்சிட்டிருக்கின்றனர். ஐசக் தாமஸின் அதிரடி இசை, பிரேம் குமாரின் இருட்டிலும் மிரட்டும் ஒளிப்பதிவு உள்ளிட்டவைகள் படத் தின் பலம்! எஸ்.எம்.ராஜுவின் எழுத்திலும், இயக்கத் திலும் ஆங்காங்கே ஒரு சில லொஜிக் மிஸ்-டேக்குகள் இருந்தாலும் வர்ணம் நல்ல வண்ணம் புதிய வானம்!!



## பிரபுதேவாவை விட்டு பிரிய மாட்டேன்

எனக்கும், பிரபு தேவாவுக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. நாங்கள் ஒன்றாகத்தான் இருக்கிறோம். அவரது குழந்தைகள் எனக்கு பிரச்சினை இல்லை. பிரபுதேவாவை விட்டு நான் பிரியமாட்டேன் என்று நயன் கூறியிருக்கிறார்.

## ஆஸ்காருக்கு மாறிய தனுஷின் மாரீசன்!



சிம்புதேவன் இயக்கத்தில் நடிகர் தனுஷ் நடிக்கும் புதிய படம் மாரீசன். ரூ 25 கோடி பட்ஜெட்டில் உருவாகும் சரித்திரப் படம் இது. தனுஷின் சம்பளத்திலும் பட்ஜெட்டிலும் ஓரளவு குறைக்குமாறு கேட்டார்களாம் யுடிவி நிறுவனம். ஆனால் இதற்கு இருவருமே ஒப்புக் கொள்ளாததால் படத்தயாரிப்பில் இருந்து யுடிவி விலக, அந்த படத்தை ஆஸ்கார் பிலிம்ஸ் தயாரிக்க முன்வந்துள்ளதாம்.

## உதவி டைரக்டர்களுக்கு தங்கம் பரிசளித்த விஜய்...!



விஜய், ஹன்சிகா மோத் வானி, ஜெனிலியா உள்ளிட்ட பலர் நடித்து இருக்கும் படம் வேலாயுதம். இந்த தீபாவளிக்கு ரிலீசாக இருக்கிறது. படம் ரிலீசாக இன்னும் ஒருசில நாட்களே உள்ள நிலையில், சமீபத்தில் இப் படத்தை முழுசாக பார்த்த விஜய், ரொம்பவே திருப்தி தெரிவித்தாராம். படத் தில் பணியாற்றிய அனைத்து உதவி இயக்குநர்களுக்கும் ஒரு தங்கச் சங்கிலி மற்றும் மோதிரம் பரிசாக அளித்து அவர்களை குஷிப்படுத்தியுள்ளாராம்.

## 3 கோடி செலவில் ராஜபாட்டை கிளைமாக்ஸ்!




இந்தப் படத்தில் விக்ரம் ஜிம் மாஸ்டராக நடிக்கிறார். எட்டு நாட்கள் எடுக்கப்பட்ட இக்காட்சியில் விக்ரம் ரிஸ்க் எடுத்து நடித்துள்ளதாகக் கூறப்படுகிறது. கிளைமாக்ஸ் சண்டை காட்சி ஸி3 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளதாக பட யூனிட் கூறுகிறது.

## பார்ட்டிக்கு போகணும்; ஆனா எல்லை மீறக்கூடாது!



நிறைய பேர் பப், பார்ட்டிகளுக்கு போகிறார்கள். எனக்கும் அங்கெல்லாம் போக பிடிக்கும். விருந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்க தயங்குவதில்லை. ஆனால் எல்லை மீறக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன். என்று கூறியிருக்கிறார் ஜெனிலியா.



## இரண்டு ஹீரோயின்களுடன் நடிப்பதில் தவறில்லை டாப்ஸி

இரண்டு, மூன்று ஹீரோயின்களுடன் நடிப்பது நல்ல அனுபவம்தான் என்றார் டாப்ஸி. கேரக்டரை மட்டும்தான் பார்க்கிறேனே தவிர, உடன் நடிப்பது எத்தனை ஹீரோயின், எத்தனை ஹீரோ என்று பார்ப்பதில்லை. ஒரு படம் என்றால் அனைவருமே முக்கியமானவர்கள்தான். இவ்வாறு டாப்ஸி கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயரூபம்

■ கி.சுவிரா

"பிரியா...! பிரியா...! ஏய் பிரியா எழும்பு. இண்டைக்கு சீக்கிரமா கிளாசுக்குப் போகவேணும் எண்டு சொல்லிப் போட்டு இன்னுமா நித்திரை" என்ற தாயின் குரல் கேட்டு கண்விழித்த பிரியா எதிரே இருந்த சுவரில் தொங்கிய கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தாள். காலை ஆறுமணி. அருகே தொங்கிக் கொண்டிருந்த நாட்காட்டியில் திகதியைப் பார்த்தவளுக்கு அப்பொழுதுதான் ஞாபகம் வந்தது. இன்று சுதாகரின் பிறந்த நாள்!.

பிரியா மிகவும் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள் அவளுக்கு ஒரே அண்ணன் சியாம். அப்பா சிவராமனின் கோடிக்கணக்கான சொத்துக்களுக்கெல்லாம் அவர்கள் இருவரும் தான் வாரிசுகள்.

பரபரப்பாக எழுந்த பிரியா குளியல் அறைக் குள் புகுந்தாள். விரைவாகக் குளித்து உடைமாற்றி வந்தவள், நேராக சியாமின் அறைக்குச் சென்று "அண்ணா நான் ரெடியாகிட்டன் நீங்கள் சொன்ன திட்டத்துக்கு நான் சம்மதிக்கிறன்" என்றாள். "சரி அப்ப இந்தா. இதைப்பிடி" என்று தனது கட்டிலுக்கு அருகில் மேசைமேல் இருந்த ஒரு சிறிய பார்சலை எடுத்து அவளிடம் கொடுத்தான். நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும் பிரியா" என்றான். "சரி அண்ணா நீங்கள் சொன்ன மாதிரியே செய்யிறன்" என்று கூறிக் கொண்டு வெளியேறி சுதாகரின் வீட்டை நோக்கிப் பயணமானாள் பிரியா.

* * *

பிரியாவும் சுதாகரும் ஆறு மாதங்களாக ஒரு வரை ஒருவர் காதலித்து வருகின்றார்கள். இருவரும் ஒரே வகுப்பில் படிக்கின்றார்கள். இதனால் அவர்கள் வெளி இடங்களில் சந்திப்பதில்லை. கலைஞரியிலேயே தமது காதலை வளர்த்துக் கொண்டனர். இந்த விசயம் வெளியே யாருக்கும் தெரியாது.

அன்று வெள்ளிக்கிழமை பிரியாவைச் சந்திக்க காத்திருந்த சுதாகரைக் கண்டதும், அவன் அமர்ந்திருந்த வேப்பமர நிழலுக்கு புள்ளிமானைத் துள்ளி ஓடினாள். "பிரியா! நான் உன்னோடை கொஞ்சம் கதைக்க வேணும். உன்னிடம் ஒரு விசயம் சொல்லவேணும். சந்தோசமானவிசயம் தான். நாளைக்கு கடற்கரைக்கு வா சொல்லுறன்" என்றான் சுதாகர். "என்ன சுதாகர். இப்பவே சொல்லக் கூடாதா. எனக்குஉடனை அறியவேணும்போலை கிடக்கு" என்று சிணுங்கினாள் அவள். "இல்லை பிரியா. அதை நான் நாளைக் குத்தான் சொல்லுவன். நீ கட்டாயம் கடற் கரைக்கு வா. சரி இப்ப நீ போட்டு வா நேரமாகுது" என்று சுதாகர் விடை பெற்றுச் சென்றான்.

மறுநாள் பிரியா தனது சிநேகிதியை பார்க்கச் செல்வ தாகத் தாயிடம் சொல்லிவிட்டு கடற்கரைக்குச் சென்றாள். கடற்கரையில் பாறைமேல் அமர்ந்திருந்து கடல் அலை களையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான் சுதாகர். அவனை அணுகிய பிரியா "சுதாகர்" என மெதுவாக அழைத் தாள். "பிரியா வந்திட்டியா. வா இப்படி உட்கார்" என்றவாறு தனக்கு அருகிலிருந்த பாறையைச் சுட்டிக் காட்டினான் அவன். அதில் அமர்ந்த பிரியா "சரி சுதாகர் என்னை வரச் சொன்ன விசயம் என்னெண்டு சொல்லுங்கள்" என்றாள். "ஒண்டு மில்லை பிரியா, வாற சனிக்கிழமை என்ரை பிறந்தநாள். அதைக் கொஞ்சம் சந்தோசமா நண்பர்களோடை கொண்டாட லாமெண்டு இருக்கிறன். அதுக்கு நீயும் வரவேணும். உன்னை என்ரை பிரெண்ட்ஸ் எல்லாருக்கும் அறிமுகப் படுத்தி வைக்கலாமெண்டு நினைக்கிறன். நீ வருவாய் தானே" "என்ன சுதாகர் நான் இல்லாமல் உங்களுக்குப் பிறந்த நாளா? கண்டிப்பாய் வருவேன்" என்றாள். இருவரும் கதைத் துக் கொண்டிருந்ததை பிரியாவுடைய அண்ணனான சியா மின் நண்பன் ராகவன் அவதானித்தான். அவன் அங்கே வந்ததையோ அவர்களைக் கவனித்ததையோ அவர்கள் அறியவில்லை. ராகவன் அவர்களை அடையாளம் கண்டு விட்டான். தான் கண்ட வற்றை நண்பன் சியாமிடம் போய்ச் சொல்லியும் விட்டான். அதைக் கேட்ட சியாம் ஆத்திரமடை யாமல் அமைதியாக ஒரு திட்டம் போட்டான்.

வீட்டுக்கு வந்த பிரியா மெல்லச் சென்று அறைக்குள் நுழைந்து கதவை சாத்தியதும் கட்டிலில் அமர்ந்து கொண்டு சுதாகருடைய பிறந்தநாளுக்கு என்ன அன்பளிப்பு வாங்கிக் கொடுக்கலாம் என யோசிக்கத் தொடங்கினாள். அந்த நேரத் தில் அவளது அறைக் கதவு 'டொக்.. டொக்' என்று தட்டப் பட்டது அந்தச் சத்தம் கேட்டு கதவைத் திறந்தாள் பிரியா. உள்ளே நுழைந்த சியாம் அவளை ஏற இறங்கப் பார்த்து விட்டு "பிரியா. நான் உன்னட்டை ஒண்டு கேட்கப் போறன். உண்மையைச் சொல்ல வேணும்" என்றான். "சரி கேளுங் கள்" என்றாள் அவள்.

"நீ அந்த சுதாகரோடை இண்டைக்கு கடற்கரைக்குப் போனியா?" என்ற கேள்வியால் தடுமாற்றம் அடைந்த பிரியா இறுதியில் ஒப்புக் கொண்டாள். " ஏன் போனாய்" என்று சற் றுக் கோபமாகவே கேட்ட போது அவள் பயத்தினால் நடந் தவை எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். "பிரியா! நீ அவ னோடை பழகிறதை நிப்பாட்டிடு. உன்ரை நன்மைக் குத்தான் சொல்லுறன். தயவு செய்து அவனை மறந்திடு அவன் நல்லவனில்லை. அவன்ரை சுயரூபம் உனக்குத் தெரியவில்லை. அதனாலை நீ அவனை நல்லவன் என்டு நினைச் சுக் கொண்டிருக்கிறாய். அவன் உன்னைக் காதலிக்கிறது போலி வேசம். உன்னட்டை இருக்கிற பணத்தைத் தான் காதலிக்கிறான். அவனைப் பற்றி எனக்கு நல்லாய்த் தெரியும்" என்றான் சியாம்.

"இல்லை அண்ணா நானும் அவரும் உண்மையாத்தான் ஒருத்தரை ஒருத்தர் காதலிக்கிறம். அவர் என்னை உயிருக்குயிராய் நேசிக்கிறார். நான் அவரைத்தானண்ணா கல்யாணம் செய்து கொள்ளப்போறன். தயவு செய்து எங்களைச் சேர்த்து வையுங்கோ" என்று கெஞ்சினாள் அவள். "இல்லை பிரியா நீ அவனைப்பற்றி முழுமையாக அறிஞ்சால் நீயாகவே அவனைவிட்டு விலகி விடுவாய். அப்படி நீ அவனைத்தான் கல்யாணம் செய்து கொள்வ தாக இருந்தால் ஒரு நிபந்தனை" என்றான். "என்னண்ணா சொல்லுங்கள்" "சுதாகருடைய பிறந்த நாள் சனிக்கிழமை தானே" "ஓமண்ணா வாற சனிதான் அவற்றை பிறந்தநாள்" பிறந்த நாளுக்கு என்ன அன்பளிப்பு வாங்கிக் கொடுக்கப்




போகிறாய். அதுதான் யோசிக்கக் கொண்டு இருந்தனான்". "அப்படியாம்... நான் உனக்கொரு கைக்கடிகாரம் தாறன் அதைக் கொண்டுபோய் உன்ரை அன்பளிப்பாக அவன்ரை கையிலை கட்டிவிடு" என்றான் அதற்குச் சம்மதித்த பிரியா தனது அண்ணனின் அன்பை எண்ணி மகிழ்ந்தாள்.

சியாம் கொடுத்த மணிக்கூட்டுப் பார்சலை எடுத்துத் தனது கைப்பையினுள் வைத்துக் கொண்டே "அண்ணா நான் போட்டு வாறன்". என்று சொல்லிவிட்டு புறப்பட்டாள். சுதாகரின் வீட்டை அடைந்த பிரியாவை அவன் வரவேற்று உபசரித்தான். அனைத்து நண்பர்களும் அவனுக்கு வாழ்த்துத் தெரிவித்து தாங்களுடைய அன்பளிப்புப் பொருட்களை வழங்கினர். கடைசியாக பிரியா எழுந்து அவனருகில் சென்று தான் கொண்டு வந்த கைக்கடிகாரத்தை அவனது கையில் கட்டிவிட்டாள். "சுதாகர் நீங்கள் இந்த மணிக்கூட்டை நித்திரை கொள்ளும் நேரத் தில் மட்டும் கழட்டி வையுங்கோ. மற்றைய எல்லா நேரமும் அதுஎன்ரை ஞாபகமாக உங்கடை கையிலை இருக்க வேணும்" என்றாள் உறுதியாக "சரி அப்படியே செய்யிறன்" என்றான் அவன்.

ஆனால் மாலையிலே சுதாகர் தனது நண்பர்களிடம் "உங்கள் எல்லாருக்கும் ஸ்பெஷலாகப் பார்ட்டி வைக்கப் போறன் வாங் கடா" என்று கூறி அவர்களை ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்றான். அவர்களுடைய மேசையில் பீர் போத்தல்கள்.

விஸ்கிப் போத்தல்கள் என பலவகை குடிவகைகள் நிறைந் திருந்தன. அனைவரும் குடித்துக் கும்மாளமடித்தனர். அப்போது சுதாகரின் நண்பன் ஒருவன் கேட்டான் "டேய் சுதாகர். நீ இனி கோடீஸ்வரன் வீட்டு மாப்பிள்ளை என்டோ சொல்லுறாய்" என்றான். உடனே சுதாகர் "பின்னை என்னடா எப்படியோ பிரியாவை மயக்கி என்னைக் காதலிக்க வைச்சிட்டன். நான் காதலிக்கிறது அவளை இல்லை. அவளின்ரை பணத்தைத்தானெண்டு அவளுக்குத் தெரியாது. அவளைக் கலியாணம் செய்தால் அவளின்ரை சொத்துக்களைத்தும்நான் அனுபவிக்கலாம். இதைவிடவும் ஸ்பெஷலான மதுபானங்களையெல்லாம் குடிச்சு சந்தோஷமாயிருக்கலாம். இதையெல்லாம் மனசிலை வைச்சுத்தான் நான் அவளைக் காதலிக்கிறன். அவளின்ரை பணம் ஒன்றுதான் என்ரை குறிக்கோள்" என்று கூறிப் பலமாகச் சிரித்தான்.

இவை நிகழ்ந்த இரண்டு நாட்களின் பின்னர் பிரியாவை அழைத்த சியாம் "தங்கச்சி நீ கொடுத்த கைக்கடிகாரத்தை எப்படியாவது இன்று அவனிடமிருந்து வாங்கிவந்து விடு" என்றான்

"ஏன் என்று கேட்ட பிரியாவிடம் எப்படியாவது அதை என்னிடம் கொண்டு வந்து திருப்பித் தந்தால்தான் உனது காத லுக்கும் கல்யாணத்திற்கும் சம்மதம் தெரிவிப்பேன்" என்றான் கண்டிப்பாக.

மறுதினம் சுதாகரைச் சந்தித்து "நான் இண்டைக்கு உங்களுக்கு ஒரு சின்னப் பார்ட்டி வைக்கப் போறன் வாங்கோ இரண்டு பேரும் கிரீம் ஹவுசுக்குப் போவம்" என்று அவனை அழைத் துக் கொண்டு சென்ற பிரியா இரண்டுஸ்பெஷல் கிரீமுக்கு ஓடர் கொடுத்து அமர்ந் தாள். இருவரும் கிரீமைக் குடித்து முடியும் வேளையில் பிரியா தனது கரண்டியால் கிரீமை கிள்ளி அவனது மணிக்கூடு கட்டியிருந்த கையில் தவறுதலாகப் பட்டதுபோல தெளித்துவிட்டாள். "சொறி சுதாகர் கையிலை பட்டிட்டுதா?. சரி வாங்கோ அந்தக் குழாயடியிலை கையைக் கழுவுவம்" என்று அவனை அழைத்துச் சென்றாள். குழாய்த் தண்ணீரில் கையைக் கழுவுவதற்காக கையை நீட்டிய சுதாகரின் கையை எட்டிப்பிடித்து "இந்த மணிக்கூட்டோடையா கழுவப் போகிறீங்கள். தண்ணிபட்டால் பழுதாகிவிடும். கழட் டுங்கோ" என்று கூறித் தானே கழற்றினாள். கழற்றிய வள் அப்படியே தனது கைப்பையினுள் வைத்துவிட் டாள். "சரி நீங்கள் கழுவிப்போட்டு வாங்கோ நான் அங்கை பில் கட்டுறன்" என்றுகூறிச் சென்றவள். பில்லைக் கட்டி விட்டுத் திரும்பியபோது சுதாகரும் வந்து சேர்ந்தான். "வாங்க சுதாகர் வீட்டுக்குப் போவம் நேரமாகுது. அம்மா தேடுவா" என்று அவனை அவசரப்படுத்தினாள். அவனும் அவசரத்தில் தனது மணிக்கூட்டை மறந்தே போனான். இருவரும் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குச் சென்றனர்.

வீட்டுக்கு வந்த பிரியா நேராக அண்ணனின் அறைக் குச் சென்று "அண்ணா நீங்கள் சொன்ன மாதிரியே அந்த மணிக்கூட்டைத் திருப்பிக் கொண்டு வந்திட்டன். இந் தாங்கோ என்றாள். அதை வாங்கியவன் "பிரியா! இனித் தான் சுதாகரைப் பற்றி முழுமையாகப் புரிஞ்சு கொள்ளப் போகிறாய்" என்றவனை வினோதமாகப் பார்த்தாள் பிரியா. அந்த மணிக்கூட்டை எடுத்து அதன் செயினில் இரண்டு கொழுக்கிகள் ஒன்றோடு ஒன்று பொருந்தும் இடத்தை மெல்லக் கழற்றி எடுத்தான். பின்பு அவ் இடத்திலேயே இருந்த சிறிய பட்டின் ஒன்றை விரலினால் அழுத்தினான். அழுத்தியதுதான் தாமதம் மணிக் கூட் டின் உள்ளே இருந்த ரெக்கோடரில் பதிவாகி இருந்த சுதாகரின் குரலும் அவனது நண்பர்களின் குரலும் தெட் டத் தெளிவாகக் கேட்டன. அன்று ஹோட்டலில் தன் நண் பர்களுடன் இடம்பெற்ற உரையாடல்கள் அனைத்தும் பதிவாகி இருந்தன. இதைக் கேட்ட பிரியாவுக்குத் தலை சுற்றியது. சுதாகரின் காதல் எவ்வளவு கேவலமானது என்பதை அறிந்தாள். சுதாகரின் சுயரூபத்தை உணர்ந்து கொண்டாள்.

சுதாகரின் சுயரூபத்தை உணர்த்திய தனது அண்ணனுக்கு நன்றி கூறிவிட்டுச் சுதாகரின் நினைவுக்கு அன் றுடன் முழுக்குப் போட்டுவிட்டாள். ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இயற்கை விரும்பி

— ரிச்சா கங்கோபாத்யாய்

**ரி**ச்சா கங்கோபாத்யாய்... உச்சரிக்கக் கொஞ்சம் சிரமமான பெயர். ஆனால், ரசிப்பதற்கு... செம 'ரிச்சா'ன ஃபிகர். தமிழில் 'மயக்கம் என்ன' படத்தின் மூலம் அறிமுகம் ஆக இருக்கிறார்.





**அது என்னங்க கங்கோபாத்யாய்?**

அது என் தாத்தாவுடைய பெயர். அதுக்கு 'கங்கைக் கரையில் பாடம் நடத்துபவர்'னு அர்த்தம். உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? என்னுடைய நிஜப் பெயர் ஆந்த்ரா. அப்படின்னா, 'பாடலோட பல்லவி'னு அர்த்தம். ஆனா, நான் கவிதை மாதிரி அழகா இருக்கிறேன்னு, அம்மா என்னை ரிச்சான்னு கூப்பிட ஆரம்பிச்சிட்டாங்க. கடைசியில் அதுவே ஆகாதிங்க. ரிச்சான்னா, வேதத்தில் 'கவிதை'னு அர்த்தமாம்!

**ஏதோ உங்க புண்ணியத்தில் மூணு நல்ல வார்த்தைகள் கத்துக்கிட்டேன். ஆமா, எப்படித் தமிழ்ப் பக்கம் வந்தீங்க?**

டைரக்டர் செல்வராகவன், தெலுங்கில் ஒரு படம் பண்றதா இருந்தார். அந்தப் படத்துக்கு என்னை ஹீரோயினா செலக்ட் பண்ணியிருந்தார். திடீர்னு 'தமிழ்ப் படம் பண்ணப்போறேன். நீ நடிக்கிறியா?'னு கேட்டார். 'மயக்கம் என்ன?' கதை சொன்னார். அந்த நிமிஷம் அவர் சொன்ன கதையில் இம்ப்ரெஸ் ஆகிட்டேன். 'மயக்கம் என்ன' படம்... ஒரு ரெகுலர் காதல் கதை கிடையாது. மூணு நண்பர்களைச் சுத்திப் பின்னப்பட்ட கதை. பயணங்களில் தான் கதை நகரும். படத்தில் மேக்கப் கிடையாது. ஷூட்டிங் அப்போ என் நடிப்பை மானிட்டரில் பார்க்கவே இல்லை. படம் ரிலீஸ் ஆனதும் பார்க்கலாம்னு இருக்கேன். செம த்ரில்லிங்கா இருக்கு!

**தனுஷும், செல்வராகவனும் ஸ்பாட்டில் எப்படி?**

ஐயய்யோ! ரெண்டு பேரும் வெவ்வேறு துருவங்கள். ஆனா, செல்வா என்ன யோசிக்கிறார்னு கரெக்டா தனுஷ் கணிச்சிருவார். ஒரு ஷாட் முடிஞ்சதும், 'செல்வா ரீ-டேக் போகச் சொல்வாரு பாரேன்'னு தனுஷ் மெதுவா சொல்வார். அதே மாதிரி நடக்கும். ஒரு நாள் தனுஷ், செல்வா வீட்டுக்கு சர்ப்ரைஸ் விசிட் அடிச்சேன். ரெண்டு பேருமே தமிழ் சினிமாவோட முக்கியமான வி.ஐ.பி-ங்க. ஆனா, அந்த அடையாளமே இல்லாம சாதாரணமா இருந்தாங்க. இந்தக் காலத்திலும் கூட்டுக் குடும்பமா, அவ்வளவு ஒற்றுமையா இருக்காங்க. எனக்கு ஆச்சர்யமா இருந்தது!

**சிம்புவோட 'ஒஸ்தி', தனுஷோட 'மயக்கம் என்ன'னு ஒரே நேரத்தில் ரெண்டு பேருக்கும் ஜோடியா நடிக்கிறீங்க. ரெண்டு பேருக்கும் 'கோல்டு வார்' இருக்கிறது தெரியுமா?**

கேள்விப்பட்டேன். ஆனா, ரெண்டு பேரும் அவங்கவங்க வேலையில் சின்சியரா இருக்காங்க. வேலையில்தான் போட்டி இருக்குன்னு நினைக்கிறேன். தனிப்பட்ட முறையில் மனஸ்தாபம் ஏதுவும் இருக்கிற மாதிரி தெரியலை. எப்படியோ, எனக்கு ரெண்டு படங்களுமே நல்ல படங்களா அமைஞ்சிருக்கு!

**ரிச்சாவோட ரோல் மாடல் யார்?**


எங்க அம்மா. அமெரிக்காவின் ஹெரண்ட் ஃபோர்டு யூனிவர்சிட்டியில் கல்வித் துறை இயக்குநரா இருக்காங்க. கடின உழைப்பாளி. நல்லாப் பாடுவாங்க. அவங்ககிட்ட இருந்துதானும் பாட்டுக் கத்துக்கிட்டேன். நடிகைகளில் என் ரோல் மாடல் ஜோதிகா. தெலுங்கில் 'நாகவல்லி' பண்ணும்போது பி.வாசு சார், ஜோதிகா நடிச்ச 'சந்திரமுகி'யைப் பார்க்கச் சொன்னார். சான்ஸே இல்லைங்க... அவங்க கண்களே அவ்வளவு பேசுது. அவங்களை நேரில் பார்க்க ஆசையா இருக்கு. இதுவரைக்கும் நேரம் அமையலை!

**அழகு ரகசியம் ப்ளீஸ்...**

நான் இயற்கை விரும்பி. முகத்துக்கு தேன், தக்காளின்னு எதையாவது தடவிட்டே இருப்பேன். நான் ஒரு நியூட்ரீஷியன் மாணவி. தண்ணீரோட மகத்துவம் தெரியும். அதனால், எப்போதும் என் பையில் தண்ணீர் பாட்டில் இருக்கும். தண்ணி குடிச்சிட்டே இருங்க. தண்ணியால் முகத்தைக் கழுவிட்டே இருங்க. ரிச்சா மாதிரி ஆகிரலாம்!

# மயக்கம் என்ன டைட்டிலுக்காக மண்டை காய்ஞ்சு போச்சு!

— செல்வராகவன்



**மயக்கம் என்ன டைட்டில் வந்தது எப்படி?**

உண்மையைச் சொன்னால் இந்தக் கதைக்கு ஆக்கிரமிக்கும் டைட்டில் எனக்குக் கிடைக்கவே இல்லை. மண்டை காய்ஞ்சு போச்சு. அப்புறம் ஒரு நாள் கார்ல போயிட்டிருந்தப்போ சிவாஜி சார் பாட்டு போயிட்டிருந்தது. அதுல பிடிச்சேன் 'மயக்கம் என்ன' டைட்டிலை. தமிழ்ல பெயர் வைக்கிறது கஷ்டமாயிருக்கு சார்.

**தனுஷ் - கதைக்காகவா உங்கள் வசதிக்காகவா...?**

இதிலென்ன வசதியிருக்கு. இன்னொரு ரோல் வரப்போனால் அறிமுக நடிகரா இருந்தால் என் செயும் செலவாட்டம் சார். இவ்வளத்துக்கு வேலை வாங்கலாம். ஆனால் தனுஷ் ஏற்கெனவே பாப்புலரானவர். அப்புறம் அவரோட கால்ஷீட் எப்படி ஃப்ரீயா இருக்குன்னு பார்க்க வேண்டியிருக்கு. அதனால வசதிக்காக இல்லை. கதைக்காகத்தான்.

**பல படங்கள் எடுத்திருக்கிறீர்கள். ஹிட் ஃபார்முலாவைக் கண்டு பிடித்துவிட்டீர்களா?**

தியேட்டரில் ஆடியன்ஸ் கதையில் தங்களை மறக்கணும். அதுதான் வேணும். பெரிய பெரிய லொகேஷன்ஸ், பிரம்மாண்ட செலவுகள் தேவையில்லை. நாலு கல்லுகூட போதும். அதோடு வியாபாரத்துக்காக எடுக்கும் படம் ஜெயிக்காது.

**முன்பு தயாரிப்பாளருக்கும் இயக்குநருக்கும் இருந்த அன்னியோன்யம் இப்ப இல்லையே?**

அதுப்பு... அன்னைய காலத்தில் தயாரிப்பாளர்கள் ஷூட்டிங் ஸ்பாட்டில் இருந்து போகமாட்டாங்க. டைரக்டரோட சேர்ந்து அவங்களும் கஷ்டப்படுவாங்க. இன்னிக்கு யார் அப்படி இருக்காங்க? சொல்லுங்க பார்ப்போம். படத்து மேல பெரிய காதலோடு தயாரிப்பாளர்கள் இருந்ததால்தான் அவங்க வரும்போது எம்.ஜி.ஆர். போன்ற ஜாம்பவான்களே எழுந்து நின்னுருக்காங்க.

**யுவன் திருமணத்துக்கு நீங்க போகலையா?**

அழைப்பு இருந்தால்தானே போக முடியும்!

**அடுத்த படத்தில் அனுஷ்காவை ஆக்ஷன் பண்ண வைக்கப் போறீங்களாமே?**

இது யாரோ கிளப்பிவிட்டது. ஆர்யா, அனுஷ்கா நடிக்கிறாங்க. இப்போதைக்கு இது போதும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# விலைமதிக்க முடியாத லியனாடோ டாவின்ஸியின் ஓவியம் ஏலத்தில் விற்பனை

உலகப் பிரசித்தி பெற்ற ஓவியர் லியனோ டாவின்ஸியின் 500 வருடங்கள் பழமையான ஓவியம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஏலத்தில் விடப்பட்டுள்ளது. டாவின்ஸி நலன் விரும்பியாக இருந்த பிரபு ஒருவரின் மகளின் திருமண வைபவத்தின் போது இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது. இவ் ஓவியத்தில் உள்ள முகத்தின் இடதுபக்க உருவம் இதில் பிரதிபலிக்கிறது. இந்த ஓவியம் ஏல விற்பனையில் 21,850 ஸ்டேர்லிங் பவுணுக்கு விலை போனது. விலை மதிக்க முடியாத இந்த ஓவியம் 1998ம் ஆண்டு நியூயோர்க் ஏலம் ஒன்றில் 14,000 பவுண்களுக்கு மாத்திரம் விலை போயிருந்தது. திருமணம் நடைபெற்ற 1496ம் ஆண்டு, வைபவத்தை சித்தரிக்கும் அல்பத்திலிருந்து இவ் ஓவியம் களவாக கிழித்து எடுக்கப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. இந்த ஓவியத்தில் லியானோ டாவின்ஸியின் விரல் அடையாளங்கள் இருப்பது இவ் ஓவியத்தின் மதிப்பை மேலும் உயர்த்துகிறது. இத்தகைய நிலையில் இந்த ஓவியம் டாவின்ஸியின் கைவண்ணத்தில் தான் வரையப்பட்டதென்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

# உலகின் மிக நீளமான வெள்ளரிக்காய் இதுதானா.



இங்கிலாந்தை சேர்ந்த ஒரு மூதாட்டி தனது தோட்டத்தில் உலகின் மிக நீளமான வெள்ளரிக்காய் விளைந்திருப்பதாக குறிப்பிடுகின்றார். திருமதி பியர்ஸ் எனும் 78 வயதான மூதாட்டியே இவ் வெள்ளரிக்காய்க்கு சொந்தக்காரியாவார். இது உலகின் நீளமான வெள்ளரிக்காயாக பதியப்பட வேண்டும் என தான் காத்திருப்பதாகவும் குறிப்பிடுகின்றார். இதற்கு முன்னர் இவ்வாறு சாதனையாக பதியப்பட்ட வெள்ளரிக்காய் 47 இஞ்ச் நீளமுடையதாக காணப்பட்டது. ஆனால் இவரது காய் 43 இஞ் நீளமுடையதாக காணப்படுகிறது. உலகின் இரண்டாவது நீளமான வெள்ளரிக்காயாக இடம் பிடிக்கும் என கருதப்படுகிறது. எனவே விரைவில் இது கின்னஸ் புத்தகத்தில் பதியப்படும் என நம்பிக்கை தெரிவிக்கின்றார் பியர்ஸ் எனும் பாட்டி.



# 11,000 பாடல்களை பாடி கின்னஸ் சாதனை படைத்த பாடகி !

பிரபல இந்தி பாடகி ஆஷா போஸ்லே கின்னஸ் சாதனை படைத்துள்ளதாக டெல்லி செய்திகள் கூறுகின்றன. பிரபல இந்தி திரைப்பட பாடகி ஆஷா போஸ்லே (78). இவர் இருபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் 11,000 பாடல்களை பாடி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். இவர் 1947க்கு பிறகு 20க்கும் மேற்பட்ட இந்திய மொழிகளில் தனியாகவும், டூயட் மற்றும் கோரசாகவும் 11,000 பாடல்களை பாடி இருக்கிறார். நும்மா ரோ தம், மெஹபூபா மெஹபூபா, பியா து அப் தோ ஆஜா மற்றும் சுரா லியா ஹை தும்னே ஜோ தில் கோ, போன்ற பிரபலமான பாடல்களை பாடி புகழ் பெற்றவர் ஆஷா போஸ்லே. தற்போது இந்தியின் ஸ்டுடியோ ரிக்கார்டிங்குகளில் அதிக பாடல்களை பாடியதற்காக இவர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். லண்டனில் நடந்த ஆசிய விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியில் கின்னஸ்க்கான அத்தாட்சி ஆஷா போஸ்லேயிடம் வழங்கப்பட்டதாக டெல்லியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆஷா போஸ்லே கூறுகையில், உலக அங்கீகாரம் பெற்ற ஒரு பாடகராக இன்று நான் உணருகிறேன். அதிகபட்ச பாடல்களை நான் பாடியிருப்பது பற்றி எனக்கு தெரியும். இருந்தும் இது பற்றி நான் இதுவரை எதுவும் சொன்னதில்லை. விஷ்வாஸ் நெருள்கர்தான் இது குறித்த சரியான தகவல்களை கின்னஸ் நிறுவனத்துக்கு கொடுத்தார். இதன் காரணமாகவே எனக்கு இந்த பெயர் கிடைத்துள்ளது என்றார்.



# பாலினாலான ஆடைகளை அறிமுகப்படுத்தும் விஞ்ஞானி


ஜேர்மனி ஹனோவரைச் சேர்ந்த விஞ்ஞானியான அன்கி டொமாஸ்க் (வயது 28) எனும் பெண்ணே இவ்வாறான பாலினால் தயாரிக்கப்பட்ட ஆடையை பெரும் உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். இவர் பாலுடன் வேறு பல பதார்த்தங்களையும் சேர்த்து விசேட பொலிமரியல் ஆடைகளை உருவாக்கியுள்ளார். இந்த ஆடைகள் பெஷன் தொழில்துறையில் புதிய வகையான போக்காக அமையுமென அவர் கூறியுள்ளார். பாலினால் தயாரான இந்த புடைவையானது தோலை சிறப்பாக பேணும் ரகத்தையும் கொண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பெரிய பெரிய விலங்குகளை உண்ணும் பாம்புகள்

மலைப்பாம்பு, அனகொண்டா போன்ற பாம்புகள் காட்டு விலங்குகளை எல்லாம் லாவகமாகப் பிடித்து உண்ணுகின்றன. உலகம் முழுவதிலும் உள்ள வன உயிரியல் புகைப்படப்பிடிப்பாளர்களால்தான் குறித்த காட்சிகள் எடுக்கப்படுகின்றன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்



■ ஹரீஸ்

எம்மிடம் இழக்க இனி எதுவுமே இல்லை, உயிர் மட்டும் தான் இருக்கிறது எனத் தெரிவித்து யாழ்ப்பாண மீனவர்கள், இந்திய துணைத் தூதுவர் திரு. மகாலிங்கத்திடம் அறிக்கையொன்றைக் கையளித்திருக்கின்றார்கள். இந்திய மீனவர்கள் தமது இழுவைப் படகுகளில் தடைசெய்யப்பட்ட மடி வலைகளை பயன்படுத்துவதால் தமது பகுதி மீன்வளங்கள் அழிந்து போகின்றன. இந்நிலை தொடர்ந்தால், தமது கடல் பிராந்தியம் வெறும் கட்டாந்தரையாவதைத் தடுக்கமுடியாது என கண்ணீர் மல்கும் முகத்துடன் கருத்துத் தெரிவிக்கின்றனர் அம் மீனவர்கள்.

மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பது அன்று தொடக்கம் இன்றுவரை தொடர்கதையைப் போல் தொடர்ந்தே செல்கிறது. இரு தரப்பு மீனவர் சந்திப்புகள், அமைச்சர்களின் உறுதி மொழிகள் என எல்லாம் கடந்த காலத்தில் ஏராளமாக நடைபெற்றன. ஆனால் அவை எவையும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட வில்லை என்பதை இப்போதும் நடைபெறும் சம்பவங்கள் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

இந்த மீனவர்கள் 1970 ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர். இவர்களின் தொழிலுக்கு உலை வைப்பவர்கள் பட்டியலில் இந்திய மீனவர்களும் சளைத்தவர்கள் அல்ல. இப்போதும் தொடர்ந்து வரும் சம்பவங்கள் இதை நிரூபிக்கின்றன. முப்பது ஆண்டு காலமாக துன்பத்தையும் பசி பட்டினி நிலைகளையும் போர் இவர்கள் மீது வலுக்கட்டாயமாகவே திணித்து வந்தது. கடல்வலயத்தடை, பாஸ் நடைமுறைகள், உயர் பாதுகாப்பு வலயங்கள் என பல்வேறு பெயர்களில் போர் இவர்களின் தொழிலை பறித்தெடுத்தது. கடலுக்கு சென்ற தன் கணவனோ பிள்ளையோ மீன் கொண்டு வருவாரா? அல்லது பிணமாக வருவாரா என்ற சந்தேகத்தில் கடற்கரையோரங்களில் கண்ணீர் வடிய காவல் இருந்த மீனவக் குடும்பத் தலைவிகள் அன்று ஏராளம்.

உயிரைப் பணயம் வைத்து உழைத்து சிறுகச் சிறுக சேமித்து கட்டிய வீடுகள் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் முடக்கப்பட்டன. தொழிலும் இல்லாமல், இருக்க வீடும் இல்லாமல், தறப்பாள் கொட்டகைகளில் அடுத்த வேளை உணவுக்கு கூட வழியற்று அலைந்த கொடுமை இவர்களின் கடந்த கால வரலாற்றுப் பதிவுகளாக உள்ளன.

ஆனால் போர் முடிவடைந்து விட்டது என அறிவிக்கப்பட்டு, பின்னர் வடக்கில் வசந்தம் வீசுகிறது என அறிவிக்கப்பட்ட போதும் வசந்தம் இவர்களின் வாழ்வில் இன்னும் வீசவே இல்லை. உயர் பாதுகாப்பு வலயங்கள், பாஸ் நடைமுறைகள் என்பன போர் அச்சம் நீங்கிவிட்ட பிறகும் நீடிக்கப்படுகின்றன. ஏதாவது ஒரு வகையில் துன்பம் இவர்களை விடாது துரத்தியே வருகிறது. அது இவர்களை விட்டு விலகவும் தயாராகவில்லை.

அந்தவகையில், தொடரும் துன்பத்தின் ஒருவடிவமாக இந்திய மீனவர் அத்துமீறல் எப்போதும் அன்றிலிருந்து இன்றுவரை தொடர்கதையாக உள்ளது.

கடற்றொழில் சமாசங்களின் தலைவர் எஸ்.தவராசா அவர்களை தொடர்பு கொண்டு இப்பிரச்சினை தொடர்பாக கேட்டபோது,

1970 ஆண்டிலிருந்து இன்றுவரை இந்திய மீனவர் அத்துமீறல் தொடர்ந்தே வருகின்றது. போர்க்காலத்தில் எமது தொழில் நடவடிக்கைகள் பாதிப்புற்றிருந்ததால் அது தொடர்பான பிரச்சனைகள் ஓரளவிற்கு எழாமல் இருந்தது. ஆனால் இன்று எமது தொழிலை அது பாதிப்படுத்தி வருகின்றது. போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கரையோர பகுதிகள் முக்கியமானவை. போரால் ஆகக் கூடிய பாதிப்பு மீனவர்களுக்கே ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இந்திய மீனவர்கள் அத்துமீறல் செய்வது எமது வளங்களை முற்றாக அழிக்கும் செயற்பாடே.

இந்த விடயத்தில் சகல தரப்பாலும் தொடர்ந்தும் மெத்தனப் போக்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. பாதுகாப்புத் தரப்பினர் இந்திய மீனவர்களை கண்காணித்தால், சரியாக தடுத்தால் இந்தப் பிரச்சனை இருக்காது. ஆனால் அதில் தொடர்ந்தும் மெத்தனப் போக்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. நாம் கேட்பது எமது பகுதிக்குள் இந்திய மீனவர்கள் வரவேண்டாம் என்பது தான். இது தொடர்பாக எத்தனையோ தடவைகள் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால் அவை எவையும் நடைமுறைப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

2004 ஆம் ஆண்டு இந்திய உயர்ஸ்தானிகருடன் சந்திப்பை நடாத்தினோம். இந்தியா சென்று மீனவர்களுடன் கதைத்தோம். ஆனால், எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த ஆண்டும் கொழும்பில் மீன்பிடி அமைச்சருடன் சந்தித்து கலந்துரையாடினோம். இது தொடர்பாக உயர்மட்ட மாநாடு டில்லியில் கூட்டி முடிவெடுக்கப்படும் என மீன்பிடி அமைச்சர் தெரிவித்திருந்தார். ஆனால் ஒரு வருடம் கடந்து விட்ட நிலையிலும் இன்றுவரை யார் அந்த மாநாட்டுக்கு போனவர்கள் அங்கு என்ன நடந்தது என்பது பற்றி எமக்குத் தெரியாது என அவர் தெரிவித்தார்.

இவ்வாறு 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதையாக இந்திய மீனவரின் அத்துமீறல் மீண்டும் தொடர்ந்து வருகின்றது.

கடந்த ஆண்டு வடமராட்சி கடற்பரப்புக்குள் அத்துமீறிப் புகுந்து மடிவலை இழுத்து தொழில் செய்த இந்திய மீனவர்கள் 103 பேர் வடமராட்சி கடற்பரப்பில் வைத்து வடமராட்சி மீனவர்களால் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் பின்னர் நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இதேவேளை பருத்தித்துறை நீதவான் நீதி மன்றத்தில் மீனவர்கள் முன்படுத்தப்பட்ட போது வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தமது தீர்ப்பில் இருநாட்டு அரசுகளும் தமது எல்லைகளை ஒழுங்காகக் கண்காணித்திருப்பின் இத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் ஏற்படவாய்ப்பிருந்திருக்காது எனத் தெரிவித்திருந்தார்.

எனவே வடபகுதி மக்களின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்துவதாக கூறும் அரசு இந்த விடயத்தில் பாராமுகமாக இருப்பது ஏன் என்பதே தமிழ் மீனவர்களின் விடைகாணமுடியாத கேள்வியாக உள்ளது. இந்த சட்ட விரோத மீன்பிடியை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அல்லது அடுத்த தேர்தல் வரை அரசின் வாக்குறுதிக்காக மக்கள் காத்திருக்க வேண்டுமா?



இந்திய நாட்டின் தமிழக கடலோர மீனவர்களின் இழுவைப் படகுகள் வகை தொகையின்றி யாழ்ப்பாண பிரதேச கடற் பரப்பிற்குள் ஊடுருவி தொழிலில் ஈடுபட்டு வருவதனால் பிரதேச மீனவர்கள் தொழில் செய்ய முடியாது பாதிப்புக்குள்ளாகி வருவது தொடர்பாக மீனவர் தொழிற்சங்க சமாசத் தலைவர், யாழ். இந்திய துணைத் தூதுவர் மகாலிங்கத்திடம் கையளித்துள்ள மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கௌரவ துணைத் தூதுவர் அவர்கள்
இந்திய துணைத்தூதரக காரியாலயம்
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய துணைத்தூதர் அவர்களே! எமது மீனவர்கள் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய தொழில் நடைமுறைகளால் பெருந்தொகையான பாதிப்புக்களை அனுபவித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளையும் இழந்து தொழில் செய்ய முடியாத பெரும் கஷ்டத்தின் மத்தியில் மனவிரக்தியடைந்த நிலையில் வாழ்கிறார்கள். இம்மாத முற்பகுதியில் பருத்தித்துறை முனை கடற்தொழில் சங்க உறுப்பினர்கள் ஏழு பேர் முற்று முழுதாக வலைகளை இழந்த நிலையில் வேறு மார்க்கம் எதுவுமின்றி கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர். இம் மாதம் 14.10.2011 அன்று இன்பருட்டி சங்க எல்லைக்குள் வசிக்கும் இடம்பெயர்ந்து வாழும் பூலோகசிங்கம் என்பவர் 1 இலட்சம் ரூபா வலைகளை இழந்துள்ளார்.

இந்திய இழுவைப் படகுகள் இரட்டை மடி பயன்படுத்தி மீன்களைப் பிடிப்பதனால் மீன்வளம் அழிக்கப்படுவதுடன் மீனவர்களின் வாழ்வாதாரமும் அழிந்து விடுகின்றது. கடல் வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுடன் எமது மீனவர்கள் செயற்பட்டு வரும் இந்நாட்களில் இந்திய படகுகளின் தொழில் நடைமுறை எமது மக்களுக்கு பாரியளவு கஷ்டத்தைக் கொடுத்து வருகின்றது.

இதனால் கடலை நம்பியிருக்கும் எம்மவர்களின் வாழ்வாதாரம் எப்படி சீராக இருக்க முடியும்? சிறப்பாக இருக்க முடியும்? தற்போது இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகள் [illegible] பட்டப்பகலில் [illegible] தொழில்களை செய்து வருகிறார்கள். இந்நிலையில் எமது மீனவர்கள் கடற்கரையில் கைகட்டி வாய் பொத்தி பார்த்துக் கொண்டு நிற்கும் நிலை தான் உள்ளது. இந்நிலைக்குக் காரணம் கடந்த போர்க்கால நடவடிக்கைகளால் தேடிய சொத்துக்கள் அழிக்கப்பட்டமை, சொந்த உறவுகள் அழிக்கப்பட்டமை, வீடு வாசல்கள் அழிக்கப்பட்டமை என்பனவாகும். இந்நிலையில் மீண்டும் தொழில் செய்ய வேண்டும் என்ற உன்னதமான எண்ணத்துடன் கடன்பட்டு வலைகளை சீர் செய்து கடலில் தொழில் செய்யப் புறப்படும் இந்திய படகுகள் வலைகளை அறுத்துச் செல்வதால் அடுத்து கடன்காரர்களுக்கு என்ன செய்ய முடியும்? கைகளைக் கட்டி கரையில் நின்று பார்ப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? இனிமேல், இழப்பதற்கு உயிர் மட்டும் தான் எஞ்சியிருக்கின்றது.

இந்திய இழுவைப் படகுகள் தொடர்பில் 2004ம் ஆண்டு நான்கு தினங்கள் கொழும்பில் இலங்கை இந்திய மீனவர்களுடன் பேச்சு நடத்தினோம். இயற்கை அனர்த்தம் காரணமாக தடைப்பட்டு பின்னர் 2010இல் இந்தியா சென்று அங்கேயுள்ள மீனவர்களைச் சந்தித்து இலங்கை மீனவர் படுகின்ற துன்பங்களை விளக்கி எடுத்துக் கூறினோம். பின்னர் மீண்டும் [illegible] மூன்று தினங்கள் மாநாடு நடத்தினோம். [illegible] இரண்டு ஆண்டுகளுக்குள் நிறுத்துவதாக கூறியிருந்தனர். பின்னர் 2011இல் இலங்கை கடற்றொழில் அமைச்சர் அவர்களின் முயற்சியுடன் அமைச்சின் காரியாலயத்தில் இந்திய இலங்கை மீனவர்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டு இழுவைப் படகு பற்றி கதைத்தோம். உடன்பாடு எட்டவில்லை. இரு அரசுகளும் பேசி நல்ல முடிவை நாடுங்கள் என்று கூறினோம். இது வரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

எனவே தங்களுக்கு இம் மகஜர் மூலம் எமது மீனவர்களின் அவலத்தை தெரிவிக்கின்றோம். தங்கள் மனிதநேய அடிப்படையில் எமது மக்களின் துயர்துடைக்க இந்திய அரசுடன் கதைத்துப் பேசி நல்ல தீர்வைப் பெற்றுத் தர உங்களால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு நல்லதொரு அமைதியான சூழலில் எமது மீனவர்களின் நலனைக் காக்க ஆவன செய்யுமாறு கோரி நிற்கின்றோம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

எடுத்தோம் கவிழ்த்தோம் என்றில்லாது மற்றவர்களின் மனநிலையை புரிந்து செயல்படும் நீங்கள், சிறந்த உடலியல் நிபுணர்கள். மாறுபட்ட அணுகு முறையால் சாதிப்பீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். திருமணத் தடை நீங்கும். குழந்தை பாக்யம் கிடைக்கும். பூர்வீக சொத்தை மாற்றியமைப்பீர்கள். இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் மதிக்கப்படுவீர்கள். முன்னேற்றப்பாதையில் பயணிக்கும் வாரமிது.



**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

சுக போகங்களை விட, சொல்களுக்கு முக்கியத்துவம் தரும் நீங்கள், கோபப்பட்டால் கொட்டித் தீர்த்துவிடுவீர்கள். எதிர்ப்புகளை சமாளிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். நண்பர்களின் அன்புத் தொல்லை குறையும். கணவுத் தொல்லை, ஒருவித படபடப்பு வந்து செல்லும். காதல் விவகாரத்தில் தள்ளி இருங்கள். தன் பலவீனங்களை சரிசெய்ய வேண்டிய வாரமிது.



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

கொடுத்து சிவந்த கைகளை உடைய நீங்கள், யார் மனமும் புண்படும்படி பேசாதவர்கள். தொட்ட காரியம் துலங்கும். பணவரவு அதிகரிக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனின் கூடா நட்பு விலகும். அயல்நாடு தொடர்புடைய நிறுவனங்களில் வேலைக் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்களுடன் பகைமை வரக்கூடும். நீண்ட நாள் கனவு நனவாகும். உத்தியோகத்தில் உங்களின் கோரிக்கையை மேலதிகாரி ஏற்பர். சிக்கனம் தேவைப்படும் வாரமிது.



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

விட்டுக் கொடுக்கும் மனம் கொண்ட நீங்கள், எல்லோரிடமும் சமமாக பழகுவீர்கள். தடைகள் உடைபடும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். குழந்தை பாக்யம் கிடைக்கும். பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துக் கொள்வார்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை தெரிந்துக் கொள்வீர்கள். சகோதரங்களுடன் பிணக்குகள் வரும். உத்தியோகத்தில் அதிகாரியின் ஆதரவால் செல்வாக்குக் கூடும். ஆளுமைத்திறன் அதிகரிக்கும் வாரமிது.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

தன்னம்பிக்கையால் எதையும் சாதிக்கும் நீங்கள், நெருக்கடி நேரத்திலும் நெறி தவறமாட்டீர்கள். எதிர்பாப்புகள் தடையின்றி முடியும். பதவிகள் தேடி வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். புது வேலை அமையும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். உடன்பிறந்தவர்கள் உங்களை சரியாகப் புரிந்துக் கொள்வார்கள். கசந்த காதல் இனிக்கும். செல்வம், செல்வாக்குக் கூடும் வாரமிது.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

அதிகம் தெரிந்திருந்தாலும் அடக்கமாக இருக்கும் நீங்கள், புகழ்ச்சிக்கு மயங்காதவர்கள். எப்படியும் வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள், நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவுவார்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருந்தாலும் மேலதிகாரியின் அறிமுகம் கிடைக்கும். துணிச்சலான முடிவுகள் இழப்பிலிருந்து மீட்கும் வாரமிது.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

கஷ்டப்பட்டு வருவோரை சமாதானப்படுத்தும் நீங்கள், நல்லது செய்தே தவிப்பவர்கள். நினைத்த காரியம் நிறைவேறும். பணவரவு திருப்தி தரும். பெரிய மனிதர்களின் தொடர்பு கிடைக்கும். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். எதிர்காலம் குறித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் சம்பளம் உயரும். நிறுவனங்களில் இருந்து புதிய வாய்ப்புகள் வரும். நேர்மறை எண்ணங்களால் வெற்றி பெறும் வாரமிது.



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

மற்றவர்களின் வளர்ச்சிக்காக பாடுபடும் நீங்கள், மனதிற்கு பிடித்தவர்களுக்காக எதையும் செய்வீர்கள். மூளை பலத்தால் முன்னேறுவீர்கள். பிரபலங்கள் நண்பர்களாவார்கள். குடும்பத்தினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை தாண்டி முன்னேறுவீர்கள். கிடைக்கின்ற வாய்ப்பை தக்க வைத்துக் கொள்ளுங்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படும் வாரமிது.



**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

போர்க் குணம் கொண்ட நீங்கள், அனுபவ பூர்வமாக பிரச்சினைகளை அணுகி தீர்வு காண்பதில் வல்லவர்கள். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவிவழியில் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உடன்பிறந்தவர்கள் கோபப்படுவார்கள். உங்களின் புது முயற்சிகளை பெற்றோர் ஆதரிப்பர். சொந்தங்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும் வாரமிது.



**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

சட்டத்திற்கு புறம்பாக எதையும் செய்யாத நீங்கள், தவறுகளை மன்னித்துக் கொள்ளாமல் தட்டிக் கேட்பவர்கள். இனிமையான பேச்சால் காரியம் சாதிப்பீர்கள். ஓரளவு பணவரவு உண்டு. குடும்பத்தாரின் ஆதரவும் பெருகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். எந்தக் காரியத்திலும் அவசரப்பட வேண்டாம். உத்தியோகத்தில் சிக்கல்கள் வரும். உங்களின் கற்பனைத்திறன் வளரும். தொடக்கத்தில் தொந்தரவு இருந்தாலும் முடிவில் நிம்மதி தரும் வாரமிது.



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

இலவசமாக எதையும் பெற மறுக்கும் நீங்கள், கடின உழைப்பால் போராடி முன்னேறுபவர்கள். சமயோஜிதமாக பேசி காரியம் சாதிப்பீர்கள், வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். குடும்பத்தில் அமைதி திரும்பும். பிள்ளைகள் நல்வழிக்கு திரும்புவார்கள். தாய்வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். முக்கிய சந்திப்புகளால் முன்னேறும் வாரமிது.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சண்டைக்காரர்களையும் நட்பாக்கிக் கொள்ளும் ஆற்றல் கொண்ட நீங்கள், யாரையும் பகைத்துக் கொள்ள விரும்ப மாட்டார்கள். உங்களின் புகழ், கௌரவம் உயரும். திடீர் பணவரவு உண்டு. குடும்பத்தில் நல்லது நடக்கும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். சில முக்கிய முடிவுகளை தள்ளிப்போடுவது நல்லது. பெற்றோரின் ஆதரவுக் கிட்டும். வியாபாரத்தில் சந்தை நிலவரத்தை அறிந்து முதலீடு செய்யுங்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சம்பள பாக்கி கைக்கு வரும். எதிலும் முதல் மரியாதைக் கிடைக்கும் வாரமிது.

# எந்த ராசிக்காரர்கள் காதலில் கில்லாடிகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் சுடர்

இந்த அழகிய காட்சி ஐஸ்லாந்தின் 'ஹெய்மேய்' என்னும் இடத்தில் உள்ளது. இந்தப் படகில் காணப்படும் மர அமைப்புகள், இங்கே வாழும் மீனவர்கள் மீன்களை காய வைக்கும் சாதனமாகும். இந்தப் பகுதியில் வாழும் மனிதர்களும், விலங்குகளும் குறிப்பிட்ட வாழ்வு முறைகளை கடைப்பிடிக்க வேண்டி உள்ளது. இந்த பகுதிக்கு வரும் புதிய நபர், இந்த பகுதி வாழ் மக்களிடம் இங்கு எப்படி சமாளித்து வாழ்வது என்பதை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். மிகவும் கஷ்டமான வாழ்க்கை வசதி கொண்ட இப்பகுதியில் நூற்றாண்டுகளாய் வாழ்பவர்கள் இப்பகுதி மக்கள்!






கானடாவை சேர்ந்த விக்டர் மிட்டிக் என்ற ஓவியர் துப்பாக்கி குண்டுகள் கொண்டு வரைந்த ஓவியம் மிகவும் புகழ் பெற்றது. இவர் முதலில் கித்தான் துணியில் ஓவியத்தை வரைகிறார். பிறகு கை துப்பாக்கி மற்றும் ஆட்டமெட்டிக் துப்பாக்கியால் துளையிட்டு ஓவியம் வரைகிறார். வண்ணம் பூசப்பட்ட இவரது ஓவியங்கள் தத்துருபமாக இருக்கிறது. மர்லின் மன்றோ மற்றும் ஜான் லெனோன் ஆகியோரையும் வரைந்துள்ளார்.

## கண் நிறைந்த அழகு!

ஒரு வியாபாரிக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தனர். ஐவரும் பெண் பிள்ளைகள். வியாபாரியும் நன்கு சம்பாதிப்பவர். ஆகையால், தன் பிள்ளைகளுக்கு எந்தக் குறையும் இல்லாமல் வளர்த்து வந்தார்.

அவர்கள் விரும்பிக் கேட்பதைத் தட்டாமல் வாங்கிக் கொடுப்பர் பெற்றோர். சகோதரிகளில் இளையவள் மட்டும் சற்று நிறம் மங்கி, கருப்பாக, அழகில்லாதவள் போல் தோன்றுவாள். மற்ற மூத்த நான்கு சகோதரிகளும் நல்ல சிவப்புடன் அழகாக இருப்பர்.


இது இவர்களுக்கு மனதில் கர்வத்தை வளர்த்தது. இவர்கள் எப்போதும் தங்களை சிங்காரித்துக் கொண்டு, கண்ணாடி முன் நிற்பதே வழக்கமாகி விட்டது. தப்பித் தவறி தன்னை அழகுப்படுத்திக் கொள்ள இளையவள் கண்ணாடி முன் நின்று விட்டால், மூத்த சகோதரிகள் ரசனையில்லாத வார்த்தைகளால் விமர்சனம் செய்ய ஆரம்பித்து விடுவர்.

இதனால் இளையவள் தனக்குள் அழுது வேதனைப்படுவாள். இளையவள், மூத்தவர்களைக் காட்டிலும் இரக்க சிந்தனையும், உதவும் மனப்பான்மையும் கொண்டவள். மூத்த பெண்களின் குணம், இளையவளுக்கு நேர் எதிரானது. தங்கள் அழகில் கர்வம் கொண்டு, வேறு எவரையும் மதிக்கவும் மாட்டர். எனவே, மற்றவர்களிடமும் அவர்களுக்கு நல்ல பெயரே இல்லை.

ஏழைக்கு அன்பு காட்டும் இளையவளை தர்ம தேவதை என்று தான் போற்றுவர் மக்கள். இவ்வளவு ஈகைக் குணம், சிறந்த பண்புகள் இருந்தும் புற அழகு போதவில்லையே... அதனால் தானே சகோதரிகள் தம்மை வெறுக்கின்றனர் என நினைத்து வேதனைப்படுவாள்.

இளையவளின் வேதனையைப் பெற்றோர் நன்கு புரிந்து கொண்டனர்.

ஒருநாள் இளையவளை



அவர்கள் அழைத்து, "நிலா இப்படி உட்கார்!" என்றனர்.

அவளும் பெற்றோரிடம் ஆசையுடன் அமர்ந்தாள். "உன் மூத்த சகோதரிகள் உன்னை மதிக்கவில்லை என்பது எங்களுக்கு தெரியும்; அதற்காகக் கவலைப்படாதே. புற அழகைக் காட்டிலும், உன் மன அழகுதான் மிகவும் அற்புதமானது.



"அதுதான் அனைவரையும் கவரும் காந்தம் போன்றது. எக்காலமும் உன் அழகுதான் வளரும், நிரந்தரமாயும் இருக்கும். இவர்களின் வெளித்தோற்ற அழகு, காலப்போக்கில் மாறிவிடும். அதை உணர்ந்து கொள் போதும்!" என ஆறுதல் கூறினர். மன நிம்மதி அடைந்தாள் நிலா

***

படத்தில் மறைந்துள்ள பொருட்களைச் சரியாக அடையாளம் காணுங்கள்



இரண்டு படத்திலும் ஐந்து வித்தியாசங்கள் உள்ளன

## கண்டுபிடியுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகம்புல்

நம்மில் பலர் அருகம்புல்லை பூஜை அறையில் வைத்துப் பயன்படுத்துவதுண்டு. ஆனால், அறுகம்புல்லின் மருத்துவப் பெருமைகளை அறிந்தவர்கள் நம்மில் எத்தனை பேர் உள்ளனர்?

நமது உடலில் ஊட்டச்சத்து பெருக வேண்டும் என்பதற்காக ஹோர்லிக்ஸ், ஓவல்டின், போன்ற பானங்களை சாப்பிடுகிறோம். ஆனால் அருகம்புல்லே அற்புதமான ஊட்டச்சத்து மூலிகை என்பது நம்மில் பலருக்கு தெரிந்திருக்காது.

நல்ல தளிர் அறுகம்புல்லை சேகரித்து நீரில் கழுவி நைய அரைத்து பசும் பாலுடன் சேர்த்து சுண்டக் காய்ச்சி நாள்தோறும் இரவில் படுக்கச் செல்லுமுன் சாப்பிட்டு வந்தால் பலவினமடைந்த உடல் தேறி நல்ல பலம் பெற்றுவிடும். வளர்ந்து வரும் குழந்தைகள் எளிதாக ஊட்டச்சத்து பெற இதே முறையைக் கையாளலாம்.

அறுகம்புல்லை நீரிலிட்டு நன்கு காய்ச்சி அந்த நீரை பதமான சூட்டில் குடித்து வந்தால் இதய நோய்க்கு இதமளிக்கும்.

திடிரென ஏற்படும் வெட்டுக்காயம் போன்ற ரண காயங்களுக்கு அரிவாள் மூக்கு என்று சொல்லப்படும் பச்சிலையையும், அறுகம்புல்லையும் சம அளவாக எடுத்து அரைத்துக் கட்டினால் உதிரப் போக்கு உடனடியாக நின்றுவிடும். காயமும் வெகு விரைவில் ஆறிவிடும்.






# கணினியில் மின்சாரத்தை மிச்சப்படுத்துவதற்கு

கணினியைப் பயன்படுத்திக் கொண்டிரு கையில் சில வேளைகளில் அப்படியே விட் விட்டு வேறு வேலைகளுக்குச் செல்ல வேண் டியதிருக்கும். இது போன்ற சந்தர்ப்பங்களில் கணினி அதிக நேரம் பயன்படுத்தப்படப்பே வதில்லை என்று எண்ணினால் அது பயன் படுத்தும் மின்சக்தியைப் பெரும் அளவில் குறைத்து மின்சக்தி வீணாவதனைத் தடுக்க லாம்.

நீங்கள் பயன்படுத்துவது விண்டோஸ் "Åü "M _ ü Ü Θ ¾\ V‡ (Sleep mode Standby) என்ற வகையில் அதனை அமை கலாம். இன்னும் கூடுதலாக மின்சக்தியை ( BÄΘÃ| Ý>ç Ç Ãì ¾' · | (hibernation என்னும் நிலைக்கு மாற்றலாம்.

இந்த இரண்டு நிலையிலும் மின்சக்தி வீணாவது தடுக்கப்படுகிறது. மேலும் பண



யாற்ற வேண்டும் என்று முடிவெடுத்து இயக்க முற்படுகையில் எங்கு எந்த புரோகிராம்களைத் திறந்திருந்தோமோ அந்த நிலையிலும் எந்த கோப்பில் எங்கு பணியாற்றிக் கொண்டிருந் தோமோ அந்த இடத்திலும் நமக்குக் கணினி இயக்கப்பட்டுக் காட்டப்படுகிறது.

Sleep mode நிலையில் மின்சக்தி மிச் சப்படுத்தப்பட்டாலும் உங்கள் கணினி இயக்க நிலையில் உள்ளது. விண்டோஸ் சிஸ்டம் அப்போது இயக்கப்பட்டுக் கொண்டிருக்கும் புரோகிராம்கள் ரம் மெமரியில் இருக்கும் அப்போது திறந்து வைக்கப்பட்டுப் பணியில் இருக்கும் கோப்புகள் ஆகியவற்றை உயிர்த் துடிப்புடன் வைத்திட மின்சக்தி தேவைப்படுகிறது.

ஆனால் ஒரு தனிப்பட்ட கணினி hibernation நிலையில் வைக்கப்படுகையில் சிஸ்ட மானது ரம் நினைவகத்தில் உள்ள அனைத் தையும் ஒரு கோப்பில் கொப்பி செய்து ஹார்ட் ட்ரைவில் வைக்கிறது.

பின்னர் கணினியை முழுவதுமாக ஷட்ட வுண் செய்கிறது. எனவே ஹைபர்னேஷன் நிலை கூடுதலாக மின்சக்தியைச் சேமிக்கிறது. ஆனால் சற்று மெதுவாகப் பழைய நிலைக் குத் திரும்புகிறது.

மிக அதிக நேரம் நிறுத்திவைத்திடப் போவதாக இருந்தால் ஹைபர்னேஷன் நிலையிலும் குறைவான நேரமே இயக்கா மல் இருக்கப் போவதாக இருந்தால் ஸ்லீப் நிலையிலும் கணினியை வைப்பது நல்லது.

நீங்கள் விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டம் பயன்படுத்து பவராக இருந்தால் டெஸ்க்டொப் திரையில் ரைட் கிளிக் செய்து கிடைக்கும் மெனுவில் Properties தேர்ந்தெடுக்கவும்.

கிடைக்கும் விண்டோவில் Screen Saver என்னும் டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும். அடுத்து Power பட்டனைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் Hibernate டேப்பில் கிளிக் செய்து Enable Hibernation. என்பதில் டிக் அடை யாளத்தை ஏற்படுத்தவும்.

அடுத்து Apply பட்டனில் கிளிக் செய் திடவும். அடுத்ததாக Power Schemes டேப்பில் கிளிக் செய்து standby மற்றும் hibernate ஆப்ஷன் களையும் காணலாம்.

நீங்கள் விஸ்டா அல்லது விண்டோஸ் 7 பயன்படுத்துபவராக இருந்தால் ஸ்டார்ட் கிளிக் செய்து Power என டைப் செய்திட வும். அடுத்து Power Options என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

இடதுபுறப் பிரிவில் Choose when to turn off the display என்பதில் கிளிக் செய் திடவும். இங்கு Sleep ஒப்ஷன் இருப்பதனைப் பார்க்கலாம். ஹைபர்னேஷன் பற்றி எதுவும் இருக்காது. எனவே Change advanced power settings என்பதில் கிளிக் செய்திடவும். Sleep after மற்றும் Hibernate after ஆகிய ஒப்ஷன்களைப் பெற Sleep பிரிவை விரிக்கவும். இங்கு நீங்கள் விரும்பும் வகை யில் செட்டிங்ஸ் ஏற்படுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்தில் புதிய கட்டிடக் கலையுடன் தொங்கும் வீடுகள்









தோட்டப்புறங்களில் தொங்கும் செடிகொடிகள், மரக்கறிகள் பலவற்றைப் பார்த்திருக்கின்றோம். ஆனால் தொங்கிக் கொண்டிருக்கும் வீடுகளைப் பார்த்ததில்லை.

ஆனால், வடமேல் அமெரிக்காவில் மரத்தில் தொங்கும் வீடுகளில் மக்கள் வசித்து வருகின்றார்கள். இத்தகைய தொங்கும் வீடுகள் சுற்றுலாப்பயணிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள பைன் காட்டுப் பகுதியில் பைன் மரங்களில் தொங்குவது போன்று சொகுசான சிறிய வீடுகள் கட்டும் கலை வளர்ந்து வருகிறது.

வடமேல் அமெரிக்காவின் இயற்கை வளம் கொண்ட பைன் மரங்களில் தொங்கும் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் வாழ்வதற்கும், உல்லாசப்பிரயாணிகளின் தற்காலிக தங்குமிடங்களாகவும் இருக்கின்றன.

இக் கட்டிடக் கலை மனதைக் கொள்ளை கொள்ளும் கலை அம்சங்களைக் கொண்டனவாக வடிவமைக்கப்பட்டு இயற்கை எழில் நிறைந்த பிரதேசத்தில் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட மரவீடுகள் கட்டடக் கலைஞனான பீடர் நெல்சன் என்பவரால் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டவை.

இக்கட்டிடங்களில் நீர்வசதி, குளியலறை வசதி, கோபுரம் மற்றும் பல வசதிகள் காணப்படுகின்றன. இங்கே செல்வதற்கு இரும்பினால் செய்யப்பட்ட பாலங்களும் அமைக்கப் பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும். அநேகமாக இவ்வில்லங்கள் வேலைத் தளங்களாகவும், ஸ்ருடியோக்களாகவும், உல்லாச இல்லங்களாகவும் இருப்பதோடு பல நிரந்தர குடியிருப்பு இல்லங்களாகவும் காணப்படுகின்றன.

# கடல் கன்னியைப் பற்றி கேள்விப்பட்ட நாம் இப்போது அதன் படத்தைப்பார்க்கலாமா

அண்மையில் அபுதாபியில் உள்ள கடற்கரையொன்றில் இறந்த நிலையில் கடல் கன்னி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விகாரமான தோற்றத்தில் காணப்படும் மேற்படி கடற் கன்னியை தமது கமராவுக்குள் பதிவேற்றியிருக்கின்றார் ஒரு புகைப்படக்கலைஞர்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு-06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2011, ஒக்ரோபர் 30 ஆம் திகதி வெளியிடப்பட்